
# பெண்



தொகுதி : 12 இலக்கம் : 2

'தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்'

# பெண்

தொகுதி : 12

இலக்கம் : 02

R. Sivalingam's Books Collections
No: 10, Buntings Lane,
Batticaloa.

Date .................... No ....................

2007

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல. 20, டயஸ் வீதி.
மட்டக்களப்பு.

தொலைபேசி இல: 065 - 2223297

Fax No : 065 - 2224657, e-mail Suriyaw@slt.lk

**THE WOMAN** - A Journal Published by
Suriya Women's Development Centre,
No: 20 Dias Lane,
Batticaloa.

| | | |
|---|---|---|
| ஆசிரியை | :- | விஜயலட்சுமி சேகர் |
| முன் அட்டை | :- | தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்களின் கைகள் |
| புகைப்படம் | :- | ஸ்டெலா விக்டர் |
| அச்சகம் | :- | வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| விலை | :- | 40/= |

## உங்களுடன்...

இவ்வருட மற்றுமொரு அடியெடுப்பை உங்களுடன் இணைந்து பதிப்பதில் மீண்டும் மகிழ்ச்சியடைகின்றேன். பெண்களின் குரல்கள் ஒதுங்கிய ஒதுக்கிய காலங்கள் தேய்ந்து தேய்ந்து இன்று முழு நிலவாய் வளர்வதெல்லாம் வளர்த்தெடுக்கப்படுவதெல்லாம் பெண்களின் அபிவிருத்திகளே என்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மகிழ்ச்சியடையும் அதேவேளை இந்த வளர்ச்சியானது பின் மறைவதற்கல்ல என்பதிலும் நாம் உறுதியாய் இருக்க வேண்டும்.

சகல தளங்களிலும் பெண்களின் அபிவிருத்தி நோக்கப்படும் இவ் வேளைகளிலும் கூட புகார் மூடிய கொழுந்துகளாய் இன்னும் இடங்களில் பெண்களின் பிரச்சனைகள் மூடிக் கிடப்பதையும் "பெண்" என்ற ரீதியில் நாம் கவனத்தில் கொள்ளுதல் கட்டாயமாகும்.

"எமது நாட்டு வருமானத்தில் பெரும் பங்கை ஈட்டிக்கொடுப்பவர்களாக மலையகப் பெண்கள் உள்ளனர்" என மார் தட்டிக் கொள்ளும் எமது நாடு, இப்பெண்களின் மனதிற்குள் உள்ள ரணங்களை மட்டும் பார்க்க மறந்து விட்டதா? அல்லது மறுக்கிறதா? பனி மூடிய மலைகளில் கூடைகளைச் சுமந்து ஏறி கூடைநிறைய நாட்டிற்கு வருமானத்துடன் இறங்கும். இவர்கள் தம் மனச்சுமைகளை இறக்கி வைப்பது எப்போது? தினம் தினம் கதிரவன் வரவு கண்டு காலைப்பனி உருகும் கூடவே இப் பெண்கள் துயர் உருகி வழிந்தோடுவதெப்போது?

கொழுந்து பறிக்கும் இவர்கள் கரங்கள் விடியல்காண வேண்டும். வாழ்க்கை வெளிச்சம் காண வேண்டும். ஆகவே உழைத்து உழைத்து மரத்துப்போன கைகளுடன் மலையேறும் இப் பெண்கள் பற்றிய சேதிகளையும் நாம் எமது இதழின் ஊடாக இன்று அனைவரதும் கருத்திற்கு கொண்டு வருகிறோம்.

"பெண்களின் உழைப்பு பெண்களின் முன்னேற்றத்திற்கு"

**அன்புடன்**
ஆசிரியை

# உள்ளே....


- சுமைகள்
- தேயிலைப் பெண்கள்
- பாவசங்கீர்த்தனம்
- புதியதொரு காலம் செய்
- வன்முறைச் சூழலுள் மலையக....
- மறு உற்பத்திக்கான உரிமையும்....
- காதல்
- அறிதலின் பின்
- பாரதிதாசனின் கவிதைகளில்....
- பாவப்பட்ட பேதைப் பெண்ணின்...
- இன்று பூச்செண்டு கிடைத்தது...
- நான் பெண் என்பதால்...
- பெண்ணும் விடுதலையும்
- முடிவற்ற சிந்தனைகள்
- பெண்மன உணர்வுகளுக்கு...
- ஒரு நிமிடம் சிந்தி
- அன்று
- நவீன எயிட்சின் பிடியில்...
- நறுக்கப்படுகின்ற மீசைகள்
- எழுதப்படாத விலாசங்கள்
- தமிழர் பாரம்பரியத்தில் பெண்...
- கேள்விகள்
- கடிதங்கள்

# சுமைகள்



மண்ணுக்குள் மறைந்திருக்கும்
விதைகளாக.....
பெண்ணுக்குள் புதைந்திருக்கும்
ஆற்றல்கள் எத்தனையோ....?

சில நிமிடங்கள் மட்டும்
சிறகடிக்கும் ஈசல்களாக
அவளது கற்பனைகள் மடிகின்றன.

மேசையில் பேனா பேப்பர்கள்
கை நீட்டி அழைக்கின்றன
ஆனால்.....
வீட்டுக்கடமைகளோ அவளைக்
கட்டியிழுக்கின்றன.

கற்பனைக் கருக்களை மட்டுமே
அவளால் சுமக்க முடிகின்றது
பிரசவிக்க முடியவில்லை.

இல்லற வண்டியை இழுக்கும்
ஒற்றை மாடாக நான்
இருப்பதால்....

- தம்பிலுவில் ஜெகா -

# தேயிலைப் பெண்கள்



தேயிலைத் தோட்ட தொழிலாளர் படையில் 70 – 80 வீதமானோர் பெண்களாவர். இப் பெண்களில் அதிகமானோர் கொழுந்து பறிக்கும் வேலையிலும் ஒரு பகுதியினர் தேயிலைத் தொழிற்சாலையில் திறன்சாரா உழைப்பிலும் ஈடுபடுகின்றனர். கொழுந்து பறிக்கும் தொழிலும் ஒரு திறன்சாரா உழைப்பாகவே கருதப்படுகிறது.

கொழுந்து பறிக்கும் பெண்ணை தமிழில் "கொழுந்தாள்" (கொழுந்து பறிக்கும் ஆள்) எனவும் ஆங்கிலத்தில் Plucker எனவும் அழைப்பர். தேயிலை உற்பத்தியின் முதுகெலும்பாக திகழும் பெண்களின் சமூக முக்கியத்துவம் இன்று இத்துறையிலுள்ள பல்வேறு பங்காளர்களாலும் உணரப்படுகிறது. "கொழுந்தாள்" எனும் அடையாளப் பெயர் மாற்றப்பட வேண்டும் என பெருந்தோட்ட அபிவிருத்தி நடவடிக்கை களில் ஈடுபடும் பலரும் விரும்புகின்றனர். எனவே "கொழுந்தாள்" எனும் அடையாளப் பெயருக்குப் பதிலாக "தேயிலைப் பெண்கள்" (Tea Women) எனும் அடையாளப் பெயரைப் பயன்படுத்துவது பொருத்தமாயிருக்கும்.

உற்பத்தித் தளத்திலும் மறு உற்பத்தித் தளத்திலும் நடைபெறும் போராட்டமாகவே தேயிலைப் பெண்களின் வாழ்வு அமைந்துள்ளது.

தேயிலை உற்பத்திக்காக தமது அன்றாட வாழ்வில் சராசரியாக எட்டு மணித்தியாலங்களை செலவிடும் இப் பெண்கள் பணப் பெறுமதியற்ற குடும்ப உழைப்புக்காக 6 – 7 மணித்தியாலங் களை அன்றாடம் செலவிடுகின்றனர்.

விடயமாகும். இதைவிட பல்வேறு விதமான பாரபட்சங்கள், பாலியல் இம்சைகள், நிர்ப்பந்தங்கள், துன்புறுத்தல்களுக்கும் மேலாளர்களால் உள்ளாக்கப் படுகின்றனர். இதற்கு எதிரான குரல் இவர்கள் மத்தியில் இன்னும் குறைவாகவேயுள்ளது.

இலங்கையின் கிராமங்களில் வாழும் பெண்களைப் போன்றே தேயிலைப் பெண்களும் குடும்பச் சுமையை சுமப்பவர்களாயும் உள்ளனர். பெருந்தோட்ட ஆண்கள் பலரும் மதுவுக்கு அடிமையா யுள்ளனர். ஒரு ஆண் தனது மாதச் சம்பளத்தில் அரைவாசிக்கும் அதிகமான தொகையைச் செலவிடுகிறார். குடும்பத்தலைவன் என அடையாளப்படுத்தப்படும் ஆணும் பிள்ளைகளும் பெண்களின் உழைப்பிலேயே அதிகம் தங்கி வாழ்கின்றனர். அவ்வகையில் பெருந்தோட்ட சமூகத்தில் குடும்பத்தை உண்மையில் போஷிப்பவராக பெண்ணே இருக்கிறார். இவ்வடிப்படையில் பார்த்தால் தேயிலைப் பெண்கள் இரட்டைச் சுமையைச் சுமப்பவர்களாயுள்ளனர்.

**- ஸ்ரெலா விக்டர் -**



# பரவசங்கீர்த்தனம்



என்னைத் தேடாத பணத்தை
நான் தேடி
ஓய்வில்லாதோடி
கூடுவாரோடு கூடி
பலரிடம் பாசாங்காய்ப் பல்லிளித்து
மனசுக்குப் பதிலாய்
"செல்போனுக்குள்"
உறவுகள் நிறைத்து
இல்லாள்
"இடித்து" அவித்தளித்த பாகத்தில்
வயிற்றை நிரப்பி
கழுத்துக்குமேல் மட்டுமே

அதிகமாய் வாழ்ந்து
தலைகீழாய்த் தொங்குகின்ற
வௌவாலின் வாழ்வன்ன போதுகளில்
தசாப்தங்களைக் கடத்திவிட்ட நான்
இன்றிரவில்
உன்னை நினைக்கிறேன் தாயே. . . .

குளிர் விறைத்து
தலையில் கூடையையும்
வயிற்றில் என்னையும்
சேர்த்துச் சுமந்துகொண்டே
திரிந்ததால்

மண்டையோட்டில் மாறாத பள்ளத்தையும்
அடிவயிற்றில் அழியாத கோடுகளையும்
போட்டுக்கொண்ட என் தாயே . . .
இந்த இரவில்
உனை நினைக்கிறேன்.
தூரத் தொலைவில்
தொலைத்துவிட்ட உன்மகனின்
பிள்ளையைத் தேடி
தள்ளாத வயதிலும்
தனியே ரயிலேறி
அடுத்த வண்டியிலே
அவளோடு புறப்பட்டு
கோயில் காட்டி கோபுரம் காட்டி
தேர் காட்டி திருவிழா காட்டி குதூகலிக்கும்
அம்மா. . . .
இன்னுமொரு தடைவை
எனக்குன் கருவறையில் இடம் தருவாயா?
அதுமட்டும் போதாது
என்னை ஈன்றதுமே நீ
இறந்து போகவும் வேண்டும்!
தாய்முகம் காணாத தற்குறியாய் வாழ்ந்தாவது
என் பாவங்களைக் கழுவுவேன் . . .

**மீனாள் செல்வன்**

நன்றி: ஊடறு (இணையதளம்)

# புதியதொரு காலம் செய்



வர்ணம் பூசிய
வார்த்தைகளால்
நீ...
வர்ணிக்கப்படுவாய்

உனக்காகவே
“வாழ்க்கை” யெனும்
பொய்யுரையால்
போர்க்கப்படுவாய்

அந்த
மாயவலையில் வீழ்ந்து
நீ...
மதிமயங்கி(க்)
கிடப்பாய்

உன் பேதமைக்கு
பரிசாக
தாலி பெறுவாய்

ஒரு பிடி அட்சதையில்
உன்...
உறவுகள்
அனைத்திலுமிருந்து
விலக்கப்படுவாய்

ஆரத்தியெடுத்து
வரவேற்கப்படும்
ஒரேயொரு
அடிமை
நீ யாவாய்

பின்னர்
தாயாவாய்
முகத்திரைகள்
விலகும்
ஆனாலும்...
அந்த(க்)
குழந்தைக்காக
நீ
தியாகியாவாய்

காதலெனும்
கபடக் கதையின்
முடிவில் - நீ
ஆகுதியாவாய்

அத்தோடு - உன்
அத்தியாயம்
முடிந்ததாக
அவர்களால்
எண்ணப்படுவாய்

அப்போது
எதிர்மறையாய்
எழுந்து நில்
உன் கால்களின்
கட்டுக்களை
அவிழ்த்து வீசு
உனக்கெனவே
ஒரு
புத்தம் புதிய
காலம் செய்
அந்த(க்)
காலத்தில் - நீ
நிச்சயமாக
அங்கீகரிக்கப்படுவாய்

- கமலினி சிவநாதன் -

# வன்முறைச் சூழலுள் மலையக சிறார்கள்



"மனிதப் பாதுகாப்பு" (Human Security) எனும் கருத்தாக்கம் தற்போது மனித உரிமையாளர்களால் முன்வைக்கப் பட்டு வருகிறது.

"விரிவான அர்த்தத்தில் மனிதப் பாதுகாப்பு எனப்படுவது, மனித உரிமைகளின் அனைத்து அம்சங்களும் அடங்கலாக, நல்லாட்சி, கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு, சுகாதார வசதிகள், ஒவ் வொரு தனிநபரும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும், அச்சமற்ற நிலைமை, தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளல், ஆரோக்கி யமான சுத்தமான பாதுகாப்பான சூழல் அனைத்தும் மனிதப் பாதுகாப்பின் அத்தியாவசியக் கூறுகளாயுள்ளன", இவ்வாறு மனிதப் பாதுகாப்பு என்பது வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

இந்த வரைவிலக்கணத்துடன் மலையக சிறார்களின் பாதுகாப்பை ஒப்பிட்டுப் பார்த்தால் பாரிய இடைவெளிகளும் முரண்பாடுகளும் நிலவுவதை நம்மால் இனங்காண முடியும்.

பொதுவாக இலங்கைச் சிறார்களின் பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகக் காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக மலையக சிறார்களின் பாதுகாப்பு எதுவிதத்திலும் உறுதிப்படுத்தப்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தோட்ட சிறார்களின் நல்வாழ்வுக்கென அரசசார்பற்ற நிறுவனங் களதும் பெருந்தோட்ட மனித அபிவிருத்திப் பொறுப்பினதும் அனுசரணையுடன் தோட்ட முகாமைத்துவத்தின் ஒத்துழைப்புடன்

முன்பள்ளிகளும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் நடாத்தப் படுகின்றன. 45 நாட்கள் நிரம்பிய கைக்குழந்தை முதல் மூன்று வயது வரையிலான பிள்ளைகள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றனர். தாய்மார் வேலைக்குச் சென்று மாலையில் திரும்பும் வரையில் இப்பிள்ளைகள் இந்த நிலையங்களில் தங்கியிருப்பார்கள்.

நான்கு முதல் ஐந்து வயது வரையிலான பிள்ளைகள் முன் பள்ளிக்குச் செல்கின்றனர். மதியம் பன்னிரண்டு மணியுடன் பள்ளி முடிவடைவதால் இவர்கள் பன்னிரண்டு மணியுடன் வீடு திரும்புகின்றனர். அரச பாடசாலைகளுக்கு செல்லும் சிறார்களும் பாடசாலை விட்டு மதியம் வீடு திரும்புகின்றனர். இவர்களுள் பருவ வயதையடைந்த சிறுமியரும் அடங்குவர். இந்தப் பிள்ளைகள் தமது தாய்மார் வேலை முடித்து வீடு திரும்பும் வரையில் லயத்துக் குடியிருப்பில் தனியாக இருக்க நேர்கிறது. சில வீடுகளில் வயோதிபர்கள் (தாத்தாமார், பாட்டிமார்) இப் பிள்ளைகளைப் பராமரிப்பார்கள். எனினும் பிள்ளைகளின் நலன்களில் கரிசனை செலுத்தக் கூடிய அளவுக்கு இவர்களின் உடல் உள ஆற்றல் என்பது இவர்களின் முதுமை நிலை காரணமாக மட்டுப்பட்டதாகும்.

தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும் ஆண்கள் இரண்டு மணியுடன் வேலை முடிந்து வீடு திரும்புவர். வேலையற்ற இளைஞர்கள், பருவகாலத் தொழிலுக்கும், தினக்கூலிக்கும், துண்டுக் கூலிக்கும் செல்லும் ஆண்கள், பாடசாலைக்கு முறையாக செல்லாத வளர்ந்த சிறுவர்கள் மற்றும் வளர்ந்த ஆண்கள் (Adult men) மாத்திரமே இருப்பர். சிறார்கள் (ஆண் மற்றும் பெண் இருபாலினரும்) லயத்துக் குடியிருப்பைச் சுற்றி விளையாடித் திரிவர். அல்லது யாருடைய வீட்டிற்காவது சென்று தொலைகாட்சி பார்ப்பர். சில பெற்றோர் வீட்டுப் பொருட்களைப் பாதுகாப்பதற்காக வீட்டைப் பூட்டி விட்டு வேலைக்குச் சென்றுவிடுவர். இவர்களின் பிள்ளைகள் பெற்றோர் வரும் வரையில் வெளியில் இருப்பர். கடும் மழை, குளிர் நேரங்களில் இப் பிள்ளைகள் சுவர் ஓரங்களிலும்

திண்ணை ஓரங்களிலும் ஒதுங்கி நடுங்கிக்கொண்டிருப்பர். அல்லது திறந்திருக்கும் அயல் வீடுகளில் புகலிடம் தேடிக்கொள்வர். இப் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் (நேரத்துக்கு சத்தான உணவு, உடல் சுத்தம், முறையான ஓய்வு, நோயின் போதான பராமரிப்பு, நேரத்துக்குப் படிப்பு. . . ) மாத்திரமல்ல அடிப்படை பாதுகாப்பே கவனத்திற் கொள்ளப்படாத நிலைமையே காணப்படுகிறது. பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தைக் கூட்டுவதற்கான வாசிகசாலையோ அல்லது உடல் - உள ஆரோக்கியத்தை உயர்த்துவதற்கான விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கான விளையாட்டு மைதானங்களோ அதிகமான தோட்டங்களில் கிடையாது.

நுவரெலியா, கண்டி, மாத்தளை மாவட்டங்களிலுள்ள தோட்டங் களைச் சார்ந்த பெண்களுடன் பரவலாக மேற்கொண்ட கலந்துரை யாடல்களின் போது பல்வேறு அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

- ஆண்கள், இளம் ஆண்கள் பலரும் மது பாவனைக்கு அதிகளவில் அடிமையாகியுள்ளனர். இளம் ஆண்கள், வளர்ந்த சிறுவர்கள் பான் பராக் எனும் போதையூட்டும் பாக்குப் பொருளை அதிகமாக பயன்படுத்துகின்றனர். இவற்றினால் இரவு நேரங்களில் குடும்பச் சண்டைகள், அயலவருடனான சண்டைகள் அதிகமாகக் காணப்படுகிறது. குடும்ப வன்முறை அதிகரித்துச் செல்கிறது. பெண்களையும் பிள்ளைகளையும் சாப்பிடவிடாது உணவுப் பாத்திரங்களை உடைப்பது – வெளியில் வீசுவது, பெண்களை (மனைவியை) துன்புறுத்துவது, இழிவுபடுத்துவது, உடைகளைக் கிழிப்பது, பாலியல் சித்திரவதைகளைச் செய்வது, மனைவியை வன்புணர்ச்சிக்குள்ளாக்குவது (சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் முன்னிலையில்), சிறுவர்களை அடித்துத் துன்புறுத்துவது, தகாத

வார்த்தைகளால் அவமதிப்பது, வயோதிபர்களை அவமதித்துத் துன்புறுத்துவது, ஆகியன நடைபெறுகிறன.

- தந்தைமாராலும் இரத்த உறவு உறவினராலும் சிறுமியர் துஷ்பிரயோகத்துக்கும் தகாப்புணர்ச்சிக்கும் (Incest) உள்ளாக்கப்படுகின்றனர். தந்தைமாரால் சிறுமியர் தகாப் புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டுள்ளனர். (தோட்டப் பகுதியில் சில தகாப்புணர்ச்சி மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் மனித நாகரீகத்தையே அச்சுறுத்தும் வகையில் வக்கிரத்தனமாக நிகழ்ந்திருப்பதை அறிய முடிகிறது).

- சிறுமியரும் பருவ வயதையடைந்த சிறுமியரும் வன் புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படும் ஆபத்து அதிகமாயுள்ளது. லயத்துக் குடியிருப்பில் தனித்திருக்கும் போதும், பாடசா லைக்கு கால்நடையாக நீண்ட தூரம் சென்றுவரும் போதும் பாலியல் வன்புணர்வுக்கான எத்தனிப்புகள் நடை பெறுவதுடன் பல்வேறு இம்சைகளுக்கும் வன்முறை யான வார்த்தைப் பிரயோகங்களுக்கும் உள்ளாக நேரிடு கிறது. இதனால் பருவ வயதையடைந்த சிறுமியர் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு வீட்டிலிருக்கும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

- குளிக்கச் செல்கையிலும் அடிப்படைக் கடன்களைக் கழிக்கச் செல்கையிலும் இளம் ஆண்களின் கல் வீச்சுக்கும் பாலியல் இம்சைகளுக்கும் வன்முறையான வார்த்தைப் பிரயோகங்களுக்கும் உள்ளாக நேரிடுகிறது.

- ஆண் சிறுவர்களும் வளர்ந்த இளம் ஆண்களினாலும் வளர்ந்த சிறுவர்களினாலும் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உள்ளாக்கப்படும் ஆபத்தும் உள்ளது.

- தற்போது அநேகமான தொழிலாளர் குடும்பங்களில் நவீன தொலைக்காட்சி இயந்திரங்களும் வீ.சீ.டீ மற்றும் டீ.வீ.டி இயந்திரங்களும் உள்ளன. (அநேகமானோர் முதிய பெற்றாரின் ஓய்வூதியப் பணத்தில் இவற்றை வாங்கு கின்றனர்). இளம் ஆண்கள் ஆபாசப் படங்கள டங்கிய சீ.டீ. க்களைப் பார்ப்பது சர்வ சாதாரணமாயுள்ளது. அந்நேரம் அவர்கள் மது மற்றும் பான் பராக் பயன் படுத்திக் கொள்கின்றனர். லயன்களிலுள்ள சிறார்களும் (ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் இரு பாலினரும்) இவர்களுடன் இணைந்து இப்படங்களைப் பார்க்கின்றனர். இந்தச் சிறுவர்கள் உட்பட லயன்களில் தனித்து இருக்கும் இளம் பெண்கள் இந்தப் படங்களினால் தூண்டப்படும் ஆண்களின் வன்முறைக்கு இலகுவில் இலக்காகும் ஆபத்து மிக அதிகமாயுள்ளது. சில நேரங்களில் ஒரு வீட்டில் சீ.டீ. மூலம் ஆபாசப் படம் ஒளி - ஒலி பரப்பாகையில் அது அந்த லயன் குடியிருப் பிலுள்ள அனைத்து வீடுகளின் தொலைகாட்சிகளிலும் தெரிவதாக பிள்ளைகளும் பெண்களும் தெரிவித்தனர். இந்த நிலை பெண்களதும் சிறுவர்களதும் பாதுகாப்புக்கு பெரிதும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும், இதை உடனடி யாக நிறுத்துவது அவசியமெனவும் நுவரெலியா பிரதேசத்திலுள்ள தோட்டப்பிரிவொன்றைச் சேர்ந்த பெண் கள் ஆதங்கத்துடனும் வேதனையுடனும் தெரிவித்தனர்.

- இத்தகைய வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், சீரழிவு களை எதிர்ப்பவர்கள், அறிவுரை சொல்ல முயல்பவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். இவர்களின் வீட்டுக் கூரைக்குக் கல்லடி விழுவதும், தகாத வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்துவது, தாக்குவது வழமையான ஒன்றா யுள்ளது. இதனால் தோட்ட மக்கள் தமது சமூகத்துள்

நிலவும் வன்முறைகள் குறித்து வெளியாருடன் கலந்துரையாட முன்வருவதில்லை.

தமது பிள்ளைகளின் பாதுகாப்பற்ற நிலைமையை பெண்கள் உணர்ந்திருந்தாலும் அது குறித்து மாற்று நடவடிக்கை எடுக்க முடியாத இயலாமையிலுள்ளனர்.

- எங்கள் பிள்ளைகளை நினைத்து நெருப்பை வயிற்றில் கட்டிக்கொண்டு மலையில் வேலை செய்கிறோம்
- மலைக்குக் கொண்டு போகும் தேநீரைக் கூட குடிக்க முடியாமல் திருப்பிக் கொண்டு வருவதுமுண்டு.
- பிள்ளைகளை நினைத்து ரொட்டிக்கு உப்புப் போடாம மாவு பிசைந்த நாட்களுமுண்டு.
- பிள்ளைகளின் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு கொழும்புக்கு பங்களாக்களில் வேலைக்கு அனுப்பியிருக் கிறோம்

பொருளாதார வசதியுள்ளவர்கள் பிள்ளைகள் பாடசாலைவிட்டு வந்ததும் அவர்களை மாலைநேர வகுப்புகளுக்கு அனுப்பி விடுகின்றனர். பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி என்பதுடன் அவர்களின் பாதுகாப்பையும் முன்னிட்டே மாலை வகுப்புகளுக்கு அனுப்புவதாக தெரியவந்தது.

பிள்ளைகளின் பாதுகாப்பை நினைத்து நினைத்து தாய்மார் உள அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதை பெண்களுடனான கலந்துரையாடல்களின் போது இனங்காண முடிந்தது.

பெருந்தோட்ட தொழிலாள சமூகத்தில் குடும்ப வன்முறைகள், பாலியல் வன்முறைகள், தகாப்புணர்ச்சி, சிறுவர் துஷ்பிரயோகம்

ஆகியன அதிகளவில் காணப்படுவதற்கு லயன் வீடமைப்பு முறை, பொருளாதார முன்னேற்றமின்மையும் வறுமையும், கல்வித் தரம் குறைவாயிருத்தல் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான வாய்ப் பின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், மதுவுக்கும் போதைப் பொருட்களுக்கும் பெரும்பான்மையானோர் அடிமையாயிருப்பது, கலாசார சீர்கேடுகளை ஊக்குவிக்கும் ஆபாசத் திரைப்படங்கள் போன்றன பிரதான காரணங்களாயுள்ளன. வன்முறைச் சூழலுக் கான இக் காரணங்கள் மற்றும் பின்புலங்கள் நேரடி வெளிக்கள செயற்பாடுகளின் மூலம் கண்டறியப்பட்டவையாகும்.

இத்தகைய சமூகக் காரணிகள் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது வன்முறைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இறுக்கமான ஆணாதிக்க சிந்தனையுடன் கூடிய சமூக அமைப்பு முறைமை காரணமாயுள்ளது. ஆணாதிக்க அதிகாரப் படிநிலையாக்கத்துக்கு உட்பட்ட பெருந்தோட்ட உற்பத்தி முறையும், நிலபிரபுத்துவ சிந்தனையால் கட்டமைக்கப்பட்டுள்ள மலையக அரசியலும் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்க முறைமையின் நிலைத்தலைப் பாதுகாக்கும் இரு பிரதான காரணிகளாயுள்ளன.

சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்குத் தற்காலிக ஏற்பாடுகள் தேவைப் படுகின்றன. தாய்மார் மாலை ஐந்து மணிக்கு வீடு திரும்பும் வரையில் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக "சிறுவர் ஓய்வு இல்லங்கள்" தோட்டப் பகுதிகளில் உருவாக்கப்படுவதன் அவசியம் பலராலும் உணரப்படுகிறது. பாடசாலையிலிருந்து திரும்பும் பிள்ளைகள் இவ் ஓய்வு இல்லங்களில் தங்கி ஓய்வெடுக்கவும், படிக்கவும், விளையாடவுமான வசதிகளைக் கொண்டதாக அவை அமைக்கப்படுவதுடன் இப் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களும் அமர்த்தப்பட வேண்டும்.

தோட்டப்புற சிறார்களின் பாதுகாப்பையும் அடிப்படைத் தேவைகளையும் கருத்திற்கொண்டு இத்தகையதொரு சிறுவர்

ஓய்வு இல்லத்தை பரீட்சார்த்தமாகவாவது அமைத்திட தொண்டர் நிறுவனங்கள் முன்வருவார்களாயின் அது பாராட்டுக்குரியதாகும்.

## மறு உற்பத்திக்கான உரிமையும் தொழில் மறுப்பும்



இலங்கையில் பிரசவகால சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற் கான உரிமை அனைத்துப் பெண்களுக்கும் சமனாகும். தொழில் செய்யும் பெண்ணொருவர் தனது சேவைக்காலத்தில் குழந்தை பிரசவிக்க நேர்ந்தால் தொழில் வழங்குனர் அப்பெண்ணுக்கு சட்டத் துக்கமைய சலுகைகளை வழங்க வேண்டும். தொழில் செய்வது ஒருவரின் அடிப்படை உரிமை எனும் வகையில் பெண்ணொருவர் கர்ப்பிணியாக இருந்தாலும் அவருக்கு தொழில் வழங்குவதில் பாரபட்சம் காட்டக்கூடாது என்கிறது அடிப்படை உரிமைகள் சட்டம்.

எனினும் தேயிலைத் தோட்டங்களில் புதிய நடைமுறையொன்று அறிமுகமாகியுள்ளது. பிறிதொரு தோட்டத்தில் வேலை செய்த பெண் திருமணமாகி தனது கணவன் வாழும் தோட்டத்துக்குக் குடி பெயர்ந்தால் கணவன் வாழும் தோட்டத்தின் நிர்வாகம் இப் பெண்ணுக்குத் தொழில் வழங்குவதில் தயக்கம் காட்டுகிறது. பெண்கள் தாம் கர்ப்பமாயுள்ளார்களா இல்லையா என்பதை நிரூபிக்க மருத்துவச் சான்றிதழ் வழங்க வேண்டும். கர்ப்பமாயிருந்தால் அவர்களுக்குத் தொழில் வழங்கப்பட மாட்டாது. தொழில் வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் 254 நாட்கள் தினக்கூலிக்கு வேலை செய்ய வேண்டும். இந்தக் காலப்பகுதியில் நிரந்தர ஊழியர்களுக்கான சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காது. பெண்ணொருவர் தினக்கூலிக்கு வேலை செய்யும் காலத்தில் குழந்தை பெற்றால் பிரசவகாலச் சலுகைகள் அவருக்கு வழங்கப்படமாட்டாது. தோட்ட நிர்வாகங்கள் தற்போது இம் முறையை கையாளத் தொடங்கியுள்ளன.

- ஸ்டெலா விக்டர் -

# காதல்

(ஆழ்ந்த நினைவுகள்)

அன்றோ ஒரு உறக்கம்
நிகழ்வுகள் புரியாத
நிம்மதிப் பெருமூச்சு - இன்றோ
உறக்கங்கள் தோல்வி கண்ட
விழிப்பின் பரிதவிப்பு......

தினமும் என் மனதிலே - நீ
மலர்வதனால் தான் இவள்
கண் திறக்கிறாள்.....
தினமும் இவளின் மனத்திரையிலே
வந்து போகும் நீ - இவளின்
இமைகள் ஒரேயடியாக மூடும்வரை
உன் ஞாபகச் சிதறல்களை
இதய அறைகள் சுவாசித்த
வண்ணமிருக்கும்!

தென்றலின் வருடலும்....
பனியின் ஸ்பரிசமும் கூட
எனக்குத் தெவிட்டலாய்
இருந்தாலும்!
உன் நினைவுகள் மறைப்பதை
மட்டும் நிராகரித்துக் கொள்கிறது.
என் மனம்!

உச்சி வானத்தை முத்தமிடத்
துடிப்பது போல்
உன் நினைவுகள் வைத்துக்
கட்டிய கோபுரம் போன்றது

என் மன மாளிகை
அந்த மனமெனும்
மாளிகையில் ஒவ்வொரு
அறையிலும் நிறைந்திருப்பது
உன் இதமான
நினைவும் தோற்றமும் தான்!

உன் உதடுகளில்
நடனமாடும் புன்னகையை
உன் உதடுகளில்
காட்சி தரும்
நடன அரங்கை
ஒருமுறையா இருமுறையா
எத்தனையோ ஆயிரமுறை
பார்த்து பார்த்து
மெய் மறந்து போயிருக்கேன்
உன் அழகிய அதரங்களை
எப்போதுமே பார்த்து
கொண்டிருப்பது தெவிட்டாத
காரணத்தால் தான்!


உன் நயனங்கள் புரியும்
அமிநயத்திற்கு வேறுயாருக்கும்
கேட்காத பக்கவாத்தியமாய்
என் இதயதுடிப்பு செயற்படும்
உன் அழகிய அதரங்களுக்கு
ஓசை கொடுப்பது என்
உயிர் எனும் ஆத்மா!

சுகன்யா

கோடுகளுக்குள் சாம்ராஜ்யம் இயற்றும்
'சக்கரவர்த்தினி' என்றேன்...
அழகியல் கடந்து அறிவாற்றலில்
கனல்வளர்த்துச்
சமூகத்தீமை கொளுத்தும் 'அக்கினிக்குஞ்சென்றேன்'

மௌனத்தினால்
சபையாளும் வித்தியாச ஆளுமையின்
வெளிப்பாடு என்றேன்...!

எதற்கும் மசியாமல்
மெத்தனமாய்
விறைப்புடன் எனை வெறித்தாய்...



'பெண் – எனும் உன் விம்பம்
தாண்டி
நமக்குள் – சொற்களின் விபரணத்துக்கு
அப்பாலான நட்பின் மெல்லிதழ்கள்
சில்லென்று மொட்டரும்பும்
அழகிய தருணமாய் உணர்ந்தேன் அக்கணத்தை...!

புத்தகங்களின் சமுத்திரத்துள்
சுழியோடி, தவம் புரிந்து
கருத்துகளின் பொக்கிஷதாரியாய் நீ
நிமிர்ந்து நிற்பது கண்டு
பிரமித்து நின்றேன்...

பிரதிபலிக்கப்படாத சூரியக்கதிராய்
அசைவற்ற பாதையாய்
உனை ஏன் மூடி இத்தனை திரை விரிப்பு...

நேற்று உன் பால்யசிநேகிதியுடன்
தற்செயலான சந்திப்பு...

தேநீர் பருகிய சம்பாஷணைப் பரிமாறலில்
உன் பதின்வயதுப் பருவத்தின்
சௌந்தர்யம் சிதைத்துக் குதறிய
உன் முரட்டுச் சித்தப்பா பற்றியும்...

கல்லூரி வசந்தம் வந்து சேர்ந்த வேளை
காதல் என்ற பெயரில் 'கானல்வரி' படித்து
பொருளாதாரக் கோட்டைமதிலில்
பூனையாய்க் குறுகிய ஒரு பச்சோந்தி பற்றியும்...

முறையூர் ச. சசீதரன்

இன்னும்....
ரணங்களைத் தின்று–
உன் சொந்தக்காலில் – எவரதும் துணை மறுத்து,
விவரணத் திரைப்பட நெறியாளினியாய்
விண்தொடும் இன்றைய
பொழுதிலும்–
உனைச் சுற்றும் 'கழுகுகள்' பற்றியும்....

விலாவாரியாய் அறிந்து, உன் இயல்பின்,
இறுக்கத்தின் விலாசம் உணர்ந்தேன்...

இனி,
உன் 'விறைப்புக்' குறித்த விசனங்கள்
என் மனக்குளத்தில்
கல் எறியாது...!
நண்பியே! உனக்கான அனுதாபங்களை மறந்தும்
தெரிவிக்க மாட்டேன்...
எதிர்காலத்தை நேர்மையாய், தைரியமாய்
எதிர்நோக்கும் உன் ஒளிமிகுந்த கண்களில்
எனக்கும் சற்றே இரவல் கொடு!

# பாரதிதாசனின் கவிதைகளில் பெண்ணுரிமைக் கருத்துகள் (1891-1964)

*– அம்மன்கிளி முருகதாஸ் –*

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாரதியார் தனது கவிதைகளினூடாகவும் மற்றும் ஆக்கங்களினூடாகவும் பெண்ணுக்கு பெண்விடுதலையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதுடன் அவள் சார்ந்த சமூகத்தின் விடுதலைக்கும் பெண்விடுதலை அவசியம் என வற்புறுத்தினார். ஏறத்தாழ அவரது காலத்தில் வாழ்ந்த பாரதியையும் விட நீண்டகாலம் (73 வயதுகாலம்) வாழ்ந்த பாரதிதாசன் பாரதியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். ஆனால் பாரதி தாசன் என்ற புனைபெயராலேயே அவர் அழைக்கப்பட்டுப் பேரும் புகழும் பெற்றுள்ளார்.

பாரதிபோன்று இளவயதிலேயே பாடல் இயற்றும் ஆற்றலைப் பெற்றிருந்த பாரதிதாசன் முறையான இலக்கண இலக்கியக் கவியைப் பெற்றவர். 1908இலே பாரதியாரை ஒரு திருமணத்தின் போது சந்தித்த அவர் பாரதியாரிடம் நட்புக் கொள்கிறார். ஆசிரியராக 1909 ஆம்ஆண்டிலே பதவியேற்ற இவர் இந்திய விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுகிறார். 10 ஆண்டுகாலம் பாரதியோடு சேர்ந்து பணியாற்றினார். 1919இல் சிறைப்பிடிக்கப்படுகிறார். கே.எஸ்.ஆர், கிறுக்கன், கண்டெழுதுவோன், கிண்டல்காரன், பாரதிதாசன் என்னும் புனைபெயர்களிலே எழுதத் தொடங்கினார். பின்னர் ஈவெராபெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டு 1928ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்தில இணைந்து கொள்கிறார். குடியரசு, பகுத்தறிவு போன்ற சஞ்சிகைகளில் எழுதுகிறார். கவிதைகளுடன் நிறைய நாடகங்கள் காவியங்களையும் எழுதினார். இவரது கவிதைகள் கதைசொல்லும் பாங்கிலேயே பெரும்பாலும் அமைவன. இவரது கவிதைகள் ஆரம்பத்தில் இந்திய விடுதலைசார்ந்தும் பின்னர் பெரியாரது பகுத்தறிவுக் கொள்கை சார்ந்தும் வெளிவந்தன. மொழியுணர்வினையும் சாதிய

எதிர்ப்பினையும் சமய வழிபாட்டெதிர்ப்பினையும் தொழிலாளர் நலன் கருதுதலையும் பெண்ணுரிமைக் கருத்துக்களையும் இவரது கவிதைகளில் பரக்கக் காணலாம் .

பெண்ணுரிமைக் கருத்துகளைப் பொறுத்தவரையில் பாரதியின் தாக்கமும் பெரியாரின் தாக்கமும் இவரிடம் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. தனது பெண்ணுரிமைக் கருத்துக்களை காவியங்களிலும் பாடல்களிலும் அதிகம் வெளிப்படுத்தியுள்ளார். சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற காவியத்திலே வருகின்ற குப்பனின் காதலி கூறுவதாக வரும் வரிகள் பெண்ணின் பேச்சுரிமை பற்றிப் பேசுகின்றன.

*பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ*
*மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை*
*பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு*
*மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே.*

என மண்ணடிமை தீருவதற்கு பெண்ணடிமை தீரவேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார்.
அத்துடன்

*ஊமைஎன்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்*
*ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு*

என்று ஆடவரது மேம்பாட்டிற்கும் பெண்ணுரிமை அவசியம் எனக் கூறுவதையும் காணலாம் .நம்மாதர் நிலை என்ற கவிதையிலே அக்காலத்துப் பெண்களின் மூடப்பழக்கவழக்கங்களைப்பற்றிக் கேலி செய்து பாடியுள்ளார்.

இவரது பாடல்களில் கூடுதலாக கைம்பெண்களின் அதாவது கணவனையிழந்த பெண்களின் பிரச்சினைகள் அவர்களது துயரங்கள் குழந்தை மணத்தின் கொடுமை போன்றன கூறப் படுகின்றன.

விதவைப் பெண்கள் பற்றி

*கைம்மைப் பழி*
*கைம்மைக் கொடுமை*
*கைம்பெண் நிலை*
*கைம்மைத் துயர்*
*கைம்மை நீக்கம்*

என்ற கவிதைகளில் கூறியுள்ளார்.

சமூகம் கைம்பெண்களை வெறுத்தொதுக்குதல் பற்றியும் அதனை நீக்கவேண்டும்என்றும் அவர் பேசுவதைக்காணலாம் . சமூகம் கைம்பெண்களை வெறுத்தொதுக்குதல் பற்றி கைம்மைப்பழி என்ற பாடலில் மேல்வருமாறு கூறுகிறார்.

*கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே– இங்கு*
*வேரிற் பழுத்த பலா–மிகக்*
*கொடிய தென்றிடப்பட்ட தண்ணே –குளிர்*
*வடிகின்ற வட்ட நிலா*
..................................

*தன் கணவன் சென்றுவிட்ட பின்–மாது*
*தலையிற் கைம்மை என ஓர் –பெருந்*
*துன்பச் சுமைதனைத் தூக்கிவைத்தார் –பின்பு*
*துணை தேடவேண்டாம் என்றார்.*

என்று கூறுகையில் பெண்ணின் நிலையையும் சமூகம் அவளின் மறுமணத்துக்கு இட்டுள்ள தடையையும் பற்றிப் பேசப்படுகின்ற மையைக் காணலாம்.மேலும் ஆணாக இருந்தால் மனைவி இறந்த மறுகணமே அவனுக்குத் துணை தேடுவதையும் அவர் காட்டத் தவறவில்லை.

கைம்மைப்பழி என்ற பாடலில்

*கூண்டிற் கிளி வளர்ப்பார்– இல்லத்தில்*
*குக்கல் வளர்த்திடுவார்*
*வேண்டியது தருவார் அவற்றின்*
*விருப்பத்தை யறிந்தே*
*மாண்டவன் மாண்ட பின்னர் அவனின்*
*மனைவியின் உளத்தை*
*ஆண்டையர் காண்பதில்லை ஐயகோ*
*அடிமைப்பெண் கதியே.*

என்று கூறும் வரிகளில் சமூகத்தால் கணக்கிலெடுக்கப்படாத கைம் பெண்களின் துயரம் பேசப்படுகிறது. அதாவது கிளிகளையும் நாய்களையும் கூட வீட்டில் வளர்க்கும் போது அவற்றின் விருப் பத்தை அறிந்து வேண்டியதைக் கொடுக்கின்ற இச்சமூகம் வீட்டின் ஒருஅங்கத்தினளாய் இருக்கின்ற கணவனையிழந்த பெண்ணின் துயரத்தை அறிந்து அதைத் தீர்க்க முன்வருவதில்லை என்பதையே இதில் தெரிவிக்கின்றார்.

*கற்கண்டு போன்ற பெண் கணவனைஇழந்தால்*
*கசந்தபெண் ஆவது விந்தைதான்புவிமேல்*
*சொற்கண்டு மலைக்காதே உன்பகுத்தறிவால்*
*தோஷம் குணம் அறிந்த நடப்பாண் துயர் கடப்பாய்*
*துணை பிடிப்பாய் பயம் விடுப்பாய்*

இது இறந்தவன் மேற்பழி என்ற பாடலில் அவளுக்குப் புத்திமதியாக் கூறப்படுகிறது.

பொதுவாகக் கைம் பெண்கள் சமூகத்தின் சட்ட திட்டங்களையேற்று தாமே தமக்குள் கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு வாழ்கின்ற நிலைமையைக் கைவிட்டு தங்கள் கைம்மை நிலையை நீக்கத் தாமே முன்வரவேண்டும் என்றும் கூறுவதைக் கைம்மை நீக்கம் என்ற கவிதையிலே காணலாம்.அதில் கைம்பெண் ஒருத்தியைக் காதலிக்கும் ஒருவன் அவளைப்பார்த்து

*பைந்தமிழைச் சீராக்கக்*
*கைம்மையெனும் சொல்நீக்கப்*
*பறந்துவாடி அழகிய மயிலே*
*இறந்தகால நடைமுறை தொலையவே*

*பகுத்தறிவான மன்று*
*பாவைநீ ஏறி நின்று*
*பாரடீ உன்எதிரினிற் பழஞ்செயல்*
*கோரமாக அழிந்தொழிகுவதையே.*

எனக் கூறுகிறான். இதில் அவர் மரபு வழிவருகின்ற பழைய நடை முறையான சமூகத்தில் விதவைகளை ஒதுக்கும் நிலை ஒழியவேண்டும் என்று எதிர்பார்ப்பதையும் தமிழர் நிலையைச் சீராக்க இது அவசியம் என கருதுவதையும காணலாம். பணமும் மணமும் என்ற கவிதையிலே விதவை விவாகம் ஒன்று சித்தரிக்கப் படுகிறது பெண் ஏழை விதவையென்றறிந்தும் அவளை ஒருவன் மணப்பதை இப்பாடலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

அக்காலத்தில் மிகவும் அதிகமாக நடைமுறையில் இருந்த பெண்களின் சிறுவயதுத் திருமணமும் (பால்ய மணம் ) இவரது கண்களில் தென்பட்டிருக்கிறது. குழந்தை மணத்தின் கொடுமை என்ற இவரது கவிதையிலே ஏழுவயதுப் பெண்குழந்தை விதவை யான நிலையில் அவளது தாய் இறந்து போக தந்தை மறுமணம் செய்து தன் புது மனைவியுடன் சல்லாபித்திருக்கையில் குழந்தை தந்தையின் அன்புக்காக இரங்கி அழுவதை பாடலில் தெரிவிக்கிறார். அத்துடன் மூடத் திருமணம் என்ற கவிதையிலே முதியவன் ஒருவ னுக்கும் சிறுவயதுப் பெண் ஒருத்திக்கும் நடந்த திருமணத்தின் பொருந்தா நிலையைச் சித்தரிக்கிறார். சிறுபெண்ணின் பரிதாப கரமான நிலை அதில் காட்டப்படுகிறது.

எழுச்சியுற்ற பெண்கள் என்ற கவிதையிலே பெண் ஒருத்தி தான் விரும்பாத நிலையில் தன்னை நெருங்கவரும் ஒருவனைத் துரத்திய டிப்பதை எடுத்துக்காட்டுகிறார்.

பெண்குழந்தை தாலாட்டு என்ற கவிதையிலே பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையின் செல்வாக்கைக் காணலாம்

*மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற*
*காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே*

*வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்கு*
*தூண்டா விளக்காய் துலங்கும் பெருமாட்டி*

*புண்ணிற் சரம் விடுக்கும் பொய்ம் மதத்தின் கூட்டத்தை*
*கண்ணிற் கனல் சிந்திக்கட்டழிக்க வந்தவளே*

*தெய்வத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை*
*உய்விக்க வந்த உவப்பே பகுத்தறிவே.*

என புதிய உலகத்தின் பெண்ணை எதிர்பார்க்கிறார். பெண்கள் பாட்டு என்ற பாடலிலும் பகுத்தறிவுச் சிந்தனை தொனிக்கிறது. கருத்தடை பற்றியும் இவர் பாடுகிறார். கருத்தடை மருத்துவமனை யில் ஒருத்தி வேண்டுகோள் என்ற அக்கவிதையில் மருத்துவ மனையில் இருக்கும் ஒரு பெண்ணின் வேண்டுகோளாக கருத்தடைக் கருத்து முன்வைக்கப்படுகிறது. அங்கே அவளது வறுமையும் அவளது வலுவின்மையும் அவளது வேண்டுகோளின் காரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இவரது பாடல்களில் பெண்ணை ஒரு பயன் படுபொருளாகக் கருதும்நிலையே காணப்படுகிறது என்பதையும் அவதானிக்கத் தவறக்கூடாது

*கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே*
*இங்கு வேரிற்பழுத்த பலா*
*கொடிய தென்றெண்ணிடப்பட்ட தண்ணே குளிர்*
*வடிகின்ற வட்ட நிலா*

என்று வரும் வரிகளில் காட்டப்பட்டுள்ள உவமைகள் அனுபவிப் புக்கானதாகவே காணப்படுகின்றன. வேரிற்பழுத்த பலா மிக இனிமை யானது. உண்பதற்குரியது. நிலா அழகைக் குறித்து அனுபவிப்பதற் குரியது. அவரது பெண் குழந்தைக்கான தாலாட்டிலும்கூட சமூக சீர்திருத்தமே பெண்ணினது முதலாவது கடமையாக முன்வைக்கப் படுகிறது. இப்பாடலில் மட்டுமல்லாது அவரது பெண்கள் பற்றிய அனைத்துப் பாடல்களிலும் பெண்ணினது அறிவைவிட அவளது அழகே முன்னிறுத்தப்படுகின்றமையை அவதானிக்கலாம் .

ஆனால் பாரதிதாசனின் ஆதர்ஷ கவிஞரான பாரதி பெண்களின் உரிமை பற்றிப் பேசும்போது பெண்ணாக நின்றே பாடியுள்ளார் அதனால் அவரது கவிதைகள் இன்றைக்கும் நிற்கின்றன. பெண்ணுரிமையாளர்களால் அதிகம் பேசப்படுகின்றன.
உதாரணம்:

*கும்மியடி பெண்ணே கும்மியடி*
*குலுங்கிடக்கைகொட்டிக் கும்மியடி*
*நம்மைப்பிடித்த பிசாசுகள் போயின*
*நன்மை கண்டோமென்று கும்மியடி*

*ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்*
*வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டி வைப்போமென்ற*
*விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.*

இந்தப்பாடல் பெண்ணை உணர்வுள்ள மனுஷியாகப்பார்க்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

பாரதிதாசனோ பெண்ணின் அழகிலும் அவள் ஒரு பயன்படு பொருள் என்ற உணர்விலும் கருத்தூன்றிய பெண்பற்றிய தந்தை வழிச் சமுதாயக் கருத்து நிலையிலிருந்து கவிதைகளை இயற்ற முனைந்ததாலேயே பெண்களை அனுதாபமாகப்பார்க்கின்ற முறையில் அவளது அழகிலும் சொத்தாகக் காணும் நிலைமை யிலுமிருந்து பெண்ணின் பிரச்சினைகளை நோக்கிக் கவிதைகளை இயற்றியுள்ளாரென அமைதி காணலாம்.

---

## சலித்துப்போன கிழக்கு!

*– சாய்ரா –*

அவசரக் குளியல்..
ஐந்து புள்ளிக் கோலம்..
தண்ணீர் லாரி போர்க்களத்தில்
குட யுத்தம்..
இவற்றுடன்தான் விடியும்
என் சலித்துப்போன கிழக்கு!

அடுக்களை அக்னிப் பிரவேசத்தில்
குக்கர் சத்தத்தையும் வென்று
உச்சஸ்தாயியில் ஒலிக்கும்..
தொலைந்துபோன சீப்புக்காக
கணவனின் குரல்!

மகளைக் குளிக்க வைத்து
சீருடை மாட்டி
உணவூட்டி
பள்ளிப் பேருந்தில் ஏற்றி
திரும்புகையில்
கண்களில் படும்
குடிக்க மறந்து ஏடு படிந்த காபி!

தலைவாரி
முகம் திருத்தி
கடிகார முட்களின் துரத்தலில்
உணவை மெல்லாமல் விழுங்குகையில்
நினைவில் வரும்
வார் அறுந்த கைப்பை!

புதுக் கைப்பைக்கென
அறுபது ரூபாயை
ஐந்து பக்க அறிவுரையுடன்
கணவன் தருகையில்
மனசுக்குள் வந்து போகும்
முன்தினம் நான் தந்த
மூவாயிர ரூபாய் சம்பள கவர்!

இருப்பினும்...
'வேலைக்குப் போகும் பெண்கள்
கொடுத்து வைத்தவர்கள்' எனும்
தோழியின் கூற்றுக்கு பதிலாய்
எப்போதும் இதழ்களில் வந்தமர்கிறது
ஆயத்தப் புன்னகை ஒன்று!

*நன்றி: அவள் விகடன்*

# பாவப்பட்ட பேதைப் பெண்ணின் பரிதாப நிலை



நான் கூறப்போகும் இச்சம்பவமானது வெறும் கற்பனைக் கதையல்ல. அனைத்துமே உண்மை. ஆம். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன் என் பெரியம்மாவின் மகளுக்கு திருமணம் நடந்தது. அவர்கள் இருவருமே மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்டவர்கள். எவரோடும் அதிகம் பேசவும் மாட்டார்கள். இவர்களுக் கிடையில் திருமணமான நாளிலிருந்து எந்தவித சண்டையோ, சச்சரவுகளோ வந்ததே இல்லை.

இந்த நிலையில்தான் சுனாமியின் தாக்கத்திற்குட்பட்டனர். இவர்களின் வீடு கடலை அண்மித்து இருந்ததன் காரணமாக "சுனாமி" முதலாம் கட்டக் கொடுப்பனவு இவர்களின் தாயிடம் கொடுக்கப்பட்டது. தாயும் தனது திருமணமான மகளின் வீட்டுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பதால் தனது திருமணமாகாத கடைசி மகளின் வீட்டை கட்டவென முடிவெடுத்தார். தன் கடைசி மகளின் காணித்துண்டில் சுனாமிக்கு முன் போடப்பட்ட அத்திவாரம் சுனாமிக்குப்பின்னும் அப்படியே இருந்ததன் காரணமாக அதனை முற்றாக கட்டிமுடிக்க நினைத்த அந்தத் தாய்க்கு இதனால் ஏற்படப் போகும் பிரச்சனையை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆம். அமைதியாக இருந்த அவ்வீட்டில் பெரும் புயல் உருவானது. "அந்தப் பணம் தங்களுக்கே சொந்தம் எனவே அப் பணத்தை தந்து விடுமாறு கணவனும், மனைவியும் சேர்ந்து அந்தத் தாயை வற்புறுத்தினார்கள். இருந்தும் அந்தத் தாய் "முடியாது" என மறுக்கவே இன்னும் அங்கே சண்டை அதிகரித்தது. இறுதியில் திருமணமாகாத தங்கையையும், தாயையும் வீட்டை விட்டு வெளி யேற்றினர். அப்பணத்தை அப்படியே அவர்களிடம் கொடுத்துவிட்டு அவ்வீட்டைவிட்டே வெளியேறி தன் இளைய மகளோடு அவளுக்குரிய காணியில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட குடிசை யொன்றில் வாழ்ந்து வந்தார்கள். இதனிடையே பணத்தை பெற்றுக் கொண்ட அவன் அப்பணத்தை என்னதான் செய்தானோ அப்பணம்

போனவழி தெரியவில்லை. அதைப்பற்றிக் கேட்க மனைவியைத் தவிர அங்கு வேறு யாருமே இல்லையே என்று தைரியத்தில் பெரிதும் சந்தோஷப்பட்டான். அப்படியே அந்தப்பணம் முடிந்து விட அவளின் நகை நாளுக்குநாள் அவனால் சூறையாடப்பட்டுக் கொண்டேயிருந் தது. இறுதியில் அவளின் அனைத்து நகைகளும் அவனால் பறிக்கப்பட்டு அவள் காதுகளில் மட்டும் ஏதோ ஒன்று சின்னதாய் மின்னிக் கொண்டிருந்தது. எனினும் தன் கணவன் மீது அளவு கடந்த பாசமும், நம்பிக்கையும் வைத்திருந்தாள் அவள். ஆனால் அவனோ அவள்மீது வைத்திருந்தது உண்மையான பாசமல்ல. அது வெறும் வேஷம் என்று அவள் உணர்ந்து கொள்ளும் நாளும் வந்தது.

ஆம் அன்றொரு சனிக்கிழமை. சில பொருட்கள் எடுத்துவர கொழும்பு செல்ல வேண்டியுள்ளது என்றவனை அவன் நல்ல படியாக நாளை மீண்டும் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையோடு வழியனுப்பி வைத்தாள் அவள். ஆனால் மறுநாள் காலை. 8.00 மணியிருக்கும் யாரோ ஓடிவந்து சொன்ன செய்தி கேட்டு கதிகலங்கிப் போனாள். ஆம் அவள் கண்ணாகக் காத்த அந்தக் கணவனானவன் யாரோ ஒருத்தியை தன்னோடு அழைத்துச் சென்றிருப்பதாகவும், அவளை அங்கு திருமணம் செய்து கொண்டதன் பின்பு தான் ஊர் திரும்பு வானாம் என்றும் அவன் நண்பர்களிடம் சொல்லிச் சென்றிருந்தான். அவர்களும் அவனிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்னபோதும் அவன் அதை ஏற்க மறுத்து விட்டானாம் என்று அவர்கள் மிகவும் மன வேதனையோடு சொல்லிக் கொண்டிருந்தபோது அதைக் கேட்டுக் கொண்டிருந்த இவளின் கண்களிலிருந்து கண்ணீர் கடலாக ஓடிக் கொண்டிருந்தது. ஆம். அன்றுதான் அவள், தான் எல்லாவிதத்திலும் நன்றாக ஏமாந்து விட்டோம் என்பதையும், அவன் தன்னை மிகவும் தந்திரமாக ஏமாற்றியிருக்கிறான் என்பதையும் உணர்ந்து கொண் டாள். பின் அவனும் அவனோடு சென்றவளும் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். இன்று அவன் அவளோடு வாழ்ந்து வருகிறான். இவளோ அன்று அவன் சொல்கேட்டு தன்னால் துரத்தப்பட்ட தன் தாயோடும், தங்கையோடும் அதைவிட மேலான கண்ணீரோடும், கவலையோடும் வாழ்ந்து வருகிறாள்.

ஆம். மறப்பதும், மணப்பதும் ஆண்களுக்கு வெகுசுலபம். ஆனால் இவை இரண்டும் பெண்களுக்கு நடப்பதென்பது மிகவும் கடினம் என ஆக்கிய நிலமைக்கு யார் எது காரணம்...?

செல்வி . S.K. மர்சினா

# இன்று பூச்செண்டு கிடைத்தது



ஆங்கிலத்தில் : கமலா பாசின்

இன்று பூச்செண்டு கிடைத்தது.
எனது பிறந்த தினமோ வேறேதும்
விசேட தினமோ இல்லை
கடந்த இரவில் எமக்குள் வாக்குவாதம்...
அவனது குரூரவார்த்தைகள்
என்னைப் புண்படுத்தியது.
எனக்குத் தெரியும் அதன் அர்த்தம்
புரியாமல் சொன்னதற்காக
வேதனையடைவானென்று...
ஏனெனில் இன்று பூச்செண்டு அனுப்பியுள்ளான்.

இன்று பூச்செண்டு கிடைத்தது
எங்களது திருமண நாளோ வேறேதும்
விசேட தினமோ இல்லை
கடந்த இரவு என்னை
சுவரில் மோதி திணறடித்தான்
அது பயங்கர கனவு போன்றது.
உண்மையென்பதை நம்பமுடியவில்லை
இன்று காலை புண்ணுடனும்
இரத்தக் கறையுடனும் எழுந்தேன்
எனக்குத் தெரியும் அவன் மனம் வருந்துவானென்று.
ஏனெனில் இன்று பூச்செண்டு அனுப்பியுள்ளான்.

இன்று பூச்செண்டு கிடைத்தது
இன்று அன்னையர் தினமோ
வேறேதும் விசேட தினமோ இல்லை
கடந்த இரவு என்னை மீண்டும் அடித்தான்.
மற்றைய நாட்களைவிட
மிகவும் மோசமான நாள்
அவனைப் பிரிந்தால்...
நானென்ன செய்வேன்?....
என் பிள்ளைகளை எப்படி பராமரிப்பேன்?.....
பணத்துக்கு எங்கே போவது?....
பயமாக இருக்கிறது அவனைவிட்டுப் பிரிய..
ஆனால் எனக்குத் தெரியும் அவன் மனம்
வருந்துவானென்று.
ஏனெனில் இன்று பூச்செண்டு அனுப்பியுள்ளான்.

இன்று பூச்செண்டு கிடைத்தது
இன்று மிகவும் விசேடமான நாள்
என்னுடைய மரணநாள் இன்று
இறுதியாக கடந்த இரவு
என்னை கொன்றுவிட்டான்
என்னை அடித்தே கொன்றுவிட்டான்
அவனை விட்டு பிரிவதற்கான
போதிய மனபலமும் ஊக்கமும் எனக்கிருந்திருந்தால்
இன்று.....
எனக்கு பூச்செண்டு கிடைத்திருக்காது.



## நான் பெண் என்பதால்
## கட்டாயம் படிக்க வேண்டும்

**தந்தை கேட்டார் மகளிடம் படிப்பு?**
**நீயேன் படிக்கவேண்டும்?**
**எனக்கு மகன்மார் பலர்,**
**அவர்களால் தான் படிக்கமுடியும்**
**பெண், நீயேன் படிக்கவேண்டும்?**
**மகள் தந்தையிடம் கூறினாள்:**
**நீங்கள் கேட்டதால்,**
**இதோ நான் ஏன் படிக்கவேண்டும்,**
**நான் பெண் என்பதால்,**
**நான் கட்டாயம் படிக்கவேண்டும்.**

**நீண்ட காலமாக மறுக்கப்பட்ட**
**உரிமையென்பதால்,**
**நான் கட்டாயம் படிக்கவேண்டும்**
**என்கனவுகள் நனவாவதற்கு**
**நான் கட்டாயம் படிக்கவேண்டும்**

அறிவு புதிய ஒளியை தரும் என்பதால்
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
களத்தில் போராடுவதற்காக
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நான் பெண் என்பதால்,
நான் கட்டாயம் படிக்கவேண்டும்.

அநாதரவாவதை தவிர்ப்பதற்கு
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
சுதந்திரத்தை பெறுவதற்கு
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
ஏமாற்றத்தை முறியடிப்பதற்கு
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
ஆத்ம திருப்தியை அடைவதற்கு
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நான் பெண் என்பதால்,
நான் கட்டாயம் படிக்கவேண்டும்.

ஆண்களின் வன்முறையோடு போராட
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
என் மௌனத்தைக் கலைப்பதற்கு
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
ஆணாதிக்கத்துக்கு சவால்விட
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
அதிகாரக் கட்டமைப்பை இல்லாதொழிக்க
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நான் பெண் என்பதால்,

நான் கட்டாயம் படிக்கவேண்டும்.

நான் விரும்பும் நம்பிக்கையை ஏற்படுத்த
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நீதியான சட்டத்தை ஆக்குவதற்கு
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நூற்றாண்டுகளாக சேர்த்த குப்பையை அகற்ற
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
சவால்களைச் எதிர்கொள்ள
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நான் பெண் என்பதால்,
நான் கட்டாயம் படிக்கவேண்டும்.

நல்லது கெட்டதை தெரிந்து கொள்ள
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
பலமான குரலைப் பெற
நான் கட்டாயம்படிக்கவேண்டும்
பெண்ணிய பாடல்கள் எழுத
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
பெண்களுக்கே உரிய உலகைப் படைக்க
நான் கட்டாயம் படிக்கவேண்டும்
நான் பெண் என்பதால்,
நான் கட்டாயம் படிக்கவேண்டும்.

தமிழில் : மங்களா சங்கர்



# பெண்ணும் விடுதலையும்...

பெண்களே நாம் என்ன செய்து கொண்டு இருக்கின்றோம் எங்கே சென்று கொண்டு இருக்கின்றோம். சிந்தித்துப் பார். மனித வரலாற்றிலே ஒரு முக்கிய பாத்திரமாகத் திகழ்பவளும் அவளே. அப்படிப்பட்ட பெண்ணினம் சமூகத்தில் இரண்டாம் பட்ச முறையில் ஆணுக்குக் கீழானவளாகவும், அவர்களது தேவையை நிறைவு செய்பவர்களாகவும் குறுகிய நோக்கோடு நடத்தப்பட்டு வருகின்றார்களே ஏன்?

சுதந்திர பூமியில் சுதந்திரமாக நடமாட முடியாது பெண்ணுக்கு எதிரான அடக்கு முறைகளும், பாலியல் வன் முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து மூலை முடுக்கெல்லாம் முன்னேறிக் கொண்டு போகிறதே எதற்காக? இவையெல்லாம் பெண் இன்னும் விடுதலை பெறவில்லை என்ப தையே வலியுறுத்து கின்றது. பெண் விடுதலையைப் பற்றிப் பேசியவர்கள் "ஊருக்கு உபதேசம் உனக்கில்லை உத்தமியே" எனச் செயற்பட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இன்னும் இந்தப் புண்ணிய பூமியில் இதையெல்லாம் சமூகங்கள் வளர்த்துக் கொண்டே இருக்கின்றது என்பதை இவை வெளிப்படுத்துகின்றது. இதை யாரும் மறுக்க, மூடி மறைக்க,

மறக்க முடியாது. பாரம்பரியப் பழமொழிகளையும் பல வாக்கியங்களையும் சாதகமாகப் பயன்படுத்தி பெண் அடிமை கொக்கரிக்கபடுகிறது.. ஆனால் இச் சமூகம் ஒன்றை மட்டும் கொள்ளவேண்டும். பெண்கள் எதிலும் எவ்விடயத்திலும் எச் செயற்பாட்டிலும் களைத்தவர்களும் அல்லர் இளைத்தவர்களும் அல்லர். நாட்டின் சுபீட்சத்திற்கும் சமூக வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வருகின்றார்கள். பெண்ணினம் அந்நியச் செலவாணியை நாட்டிற்கும் வீட்டிற்கும் ஈட்டிக் கொடுக்கின்றனர்.

பல துறைகளிலும் முன்னணி வகிக்கின்றார்கள். அது மட்டுமல்லாது ஆண்களுக்கு நிகராக களம் குதித்து போராடி வெற்றிநடை போடுகின்றார்கள் இப்படிப்பட்ட பெண்ணினமா? ஆணுக்கு அடிமை? என்று கேட்கின்றோம். அடக்கம் பெண்ணின் பெரும் சொத்து வரவேற்கின்றோம். ஆனால் அடக்கம் என்ற போர்வையில் புகுத்தப்படுகின்ற அடக்கு முறைகளையும் அடிமைத் தனத்தையும் வரவேற்கவில்லை. யாருக்கு யாரும் அடிமை யில்லை.

அன்புக்கு மட்டுமே மனிதன் அடிமை இந்த உண்மையை புரிந்து விட்டாலே போதும் ஆனால் காலங்கள் மாறிக் கொண்டி ருக்கின்றன. பெண் மாறவில்லை. பெண்ணின் ஆடை, ஆபரணங் கள் மாறலாம். பாதையும், பாதச்சுவடுகளும் மாறலாம். அவள் பயணங்கள் மாறவில்லை என்றும் பெண் பெண்ணாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். அவளது எண்ணங்கள் கனவல்ல என்றும் நிஜமாகவே உள்ளன. நாம் கேட்பது விடுதலையுள்ள சுய உரிமைப் பெண்களையே.

**கலைவாணி - பாலன்**

*கறப்பளை -*

# முடிவற்ற சிந்தனைகள்...

எங்கோ விசிறியடிக்கப்பட்ட
நீர்த்துவாலைகள்
காற்றில் அடிக்கப்பட்டு
என் உடலில்
உரசிச் சென்றன.
கசக்கிப் பிழியப்பட்டு
காய்ந்து போன சக்கையாக – என்னை
வடிவம் மாற்ற
முனைந்தவர்களுக்கு,
இருட்டடிப்பு செய்யப்பட்ட
இருண்ட காலத்திலும்
என் இருப்பை – நான்
உணர்த்திச் சென்றேன்
விறைப்புற்றிருந்த நினைவுகள்
எல்லை தாண்டி
மீட்டப்பட்ட போது
சலனமற்ற எதிர்பார்புகள்,
நம்பிக்கை கலந்த ஏக்கங்கள்
தடையின்றிப் பயணிக்கும்
இறுக்கமான சூழ்நிலையிலே
இன்னும் தொடர்கின்றன
முடிவற்ற சிந்தனைகளாக...

குகநிதி குகநேசன்

# பெண்மன உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் கு.ப.ரா

**த**மிழ் சிறுகதை உலகில் கு.ப.ரா. என அழைக்கப்படும் கு.ப.ராஜகோபாலனுக்கு ஒரு தனித்துவமான இடம் உண்டு என்பதை அவருடைய இலக்கிய வரலாற்றுக் காலம் (1933-1944) நிரூபிக்கின்றது. பன்மொழி அறிவுள்ளவர். ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளி, தெலுங்கு, ஆகிய மொழிகளில் பரிச்சயம் உடையவர். 1902 இல் கும்பகோணத்தில் பிறந்தார். சிறுகதை, நாவல், கட்டுரை, மொழிபெயர்ப்பு , எனப் பல்வேறு துறை சார்ந்த ஆக்கங்களையும் எழுதியுள்ளார். இவருடைய இலக்கிய உலகத்தினை தேவசகாய குமார் "புதுமைப்பித்தனின் படைப்புலகம் அடர்ந்த காடு எனின் கு.ப.ராவின் படைப்புலகம் சிறுபூங்கா என்று கூறுகின்றார்.

தொடர்ந்து இவருடைய சிறுகதை பற்றி பிச்சமூர்த்தி கூறும்போது "அநேகமாய் அவனுடைய எழுத்துக்கு ஆண்-பெண் உறவுதான் அடிப்படையாய் இருக்கும். அவ்விடயத்தினைத் தவிர்த்து அவன் சிறுகதையோ, கவிதையோ எழுதவில்லை என்று கூடச் சொல்ல லாம். நிழலைப் போல் பெண்ணின் சித்தத்தை இருளாக்கும் கருவால் வென்றுவிட்ட வேட்கைகளையும் வெகு நுட்பமாகவும் அநாயாசமாகவும் படம் பிடிப்பதில் நிகரற்றவன். பெண்ணின் மனதைச் சித்தரிப்பதில் வல்லவன். (அவன் முதல் கதை நூருன்னி சாவில் குறிப்பிடுகின்றார்.) தொடர்ந்து தமிழ் இலக்கியத்தில் சிறப்பான தொரு பகுதி தமிழ் சிறுகதைகளில் அவருக்கு முன்னரோ பின்னரோ பலரும் தொடாத விடயங்களை எட்டித் தொட்டுக் காட்டியிருக் கின்றார்.

"என் அனுபவத்திலும் வாழ்க்கையிலும் அவைதாம் அதாவது உடைந்த மனோரதங்கள், நிறைவேறாத ஆசைகள், தீய்ந்த காதல்கள் ஆகியவை... எங்கே திரும்பினாலும் கண்ணில்

படுகின்றன என்று தனது கதைகளில் உள்ளடக்கத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

ஆண் - பெண் உறவில் ஆண்வழி நோக்குடைய இலக்கியங்கள் அதற்குமுன் படைக்கப்பட்டுள்ளன. பெண்வழி நோக்குடன் உறவுகள் அணுகப்படவில்லை. பெண்ணிலைவாதம் (feminisam) என்ற கண்ணோட்டத்தில் அணுகப்படவில்லை. பாரதியின் புதுமைப் பெண்ணுக்கு பின்னால் கு.ப.ராவின் பெண்ணே தமிழ்ச் சிறுகதையுலகில் பேசுகிறாள்.

கு.ப.ரா. ஓரிடத்தில் "இதுவரையில் உலகம் சிருஸ்டியான காலம் முதல் மனிதனே பேசிக் கொண்டிருந்தான். இப்போது பெண் பேசுகின்றாள். இத்தனை யுகங்களாகக் கட்டிக்கிடந்த அவள் குரல் இளவேனிற்காலத்து குயிலின் குரல் போல இன்று ஒலி கொள்கிறது. இனி மனிதனின் வாய் அடைபட்டுப் போகும் புதுமைப் பெண்ணின் போக்கின் அர்த்தம் இதுதான்... என்று குறிப்பிடுகின்றார்.

இவரது கதைகளில் சிறுமி, கன்னி, திருமணமானபெண், பிராமணப்பெண், விதவை, விபச்சாரிகள் , என சமூகத்தின் பல்வேறு மட்டத்திலும் வாழ்வில் நிற்கும் பெண்களின் உள்ளக் குமுறல்கள், சந்தேகங்கள், காதல், கோபம், பொறாமை, எதிர்பார்ப்பு, ஏக்கம், ஏமாற்றம், போன்றவற்றை நுட்பமாக உளவியல் சார்ந்து வெளிப் படுத்துகின்றார். பெண்ணின் மனஉணர்வுகளை சமூகத்தில் நிலவும் மூடக்கொள்கைகள், அர்த்தமற்ற கட்டுப்பாடுகள், கைமைக் கொடு மைகள், பெண்களின் பரிதாபநிலை, மனச்சிக்கல்கள், ஆசை-நிராசை, போன்றவிடயங்களை சிறிது வெளிச்சம், ஆற்றாமை, மூன்று உள்ளங்கள், கனகாம்பரம், புனர்ஜென்மம், என்ன அத்தாட்சி, மோகினிமாயை, என்ன வேண்டும், தனபாக்கியத்தின் தொழில் கதைகளில் காணலாம். பாலுணர்வு தொடர்பான கதைகள் எழுது கின்ற பொழுது சிக்மண்ட் புரொய்டின் விளக்கங்களை வாசகர்க ளுக்கு உணர்த்த வேண்டும் என்ற கருத்துடையவர். கு.ப.ரா பெண்ணின் அங்க அமைப்புக்களை தொடர்புபடுத்தி விளக்கவில்லை. மாறாக அவ்வுணர்வுகளை மானிட அமைப்பின் அடிப்படை

அம்சமாகவும் மனதில் ஆழத்தில் பொதிந்து கிடக்கின்ற ஒரு முதனிலை உணர்ச்சியாகவும் எடுத்தக்காட்டுகின்றார்.

இவர் ஆண்-பெண் பாலுணர்வை வெளிப்படுத்தும் போது விரசத்தன்மையில்லாமல் இயற்கையுடன் தொடர்புபடுத்தி பசி வந்தால் வெளிக்காட்டுவது போல தாகத்துக்கு தண்ணீர் குடிப்பது போல பண்பாட்டின் எல்லைக்குள் நின்று சித்தரிக்கின்றார். அவ்வாறு சித்தரிக்கும் பொழுது கவர்ச்சியும் கிளர்ச்சியும் ஊட்டக் கூடிய சொற்களைக் கையாளாமல் மாறாக குறிப்பாற்றல் மிகுந்த மென்மையான, அமைதியான சொற்களைக் கையாண்டுள்ளார். உதாரணமாக "சிறிதுவெளிச்சம்" எனும் தலைப்பின் சொல்லையே எடுத்துக்காட்டலாம்.

இவரது கதைகளில் கனகாம்பரம் என்ற கதை கிராமப் புறத்தில் வாழ்ந்த பெண் ஒருத்தி நகர்ப்புறத்து ஆணைத் திருமணம் செய்து நகர்ப்புற வாழ்க்கை அனுபவிக்க நேரிடும் போது அதனால் அவள் படும் இன்னல்களையும் விரிசல்களையும் எடுத்துக் காட்டுகிறது. இந்த விடயம் இன்றைய காலகட்டத்தில் புலம் பெயர்நாடுகளுக்கு சீதனத்துக்காக, பணத்துக்காக வயது ஏற்றத் தாழ்வு பார்க்காமல் பெற்றோர் தம் விருப்பத்தையே முன்னிறுத்தி திருமணம் முடித்துக் கொடுத்து அனுப்புகின்றனர். அவர்களுக்குத் தெரியுமா? அங்கு என்ன அட்டூழியம் நடக்குதென்று...? அவர்களுக்குத் தெரிவதொல்லாம் கற்பனையுடன் கூடிய சந்தோசம் தான்... எனவே பெற்றோரின் விருப்பத்திற்கு செவிசாய்த்து வாழ்க்கையில் அவள் படும் இன்னல்களையும் விரிசல்களையும் கனகாம்பரம் சிறுகதை என்றும் எமக்கு ஞாபகப்படுத்தும்.

இவரது கதைகளில் வரும் பெண்கள் மனப்பக்குவமும் மனமுதிர்ச்சியும் பெற்றவர்களாக இருப்பர். அவர்களது உணர்வுகளை அதாவது கோபத்தை அன்பை, பொறாமையை, விரக்தியை, தங்கள் கூற்றுக்களாகவும் ஒரு வரியில், ஒருபெரிய மூச்சில், விடைகூறமுடியாத மௌனங்கள் மூலமும் வெளிப் படுத்துகின்றார். பெண்களைத் தெய்வங்களாக்கி அவர்களுடைய உள்ளங்களைத் தீய்ந்து விடாமல் அவர்களையும் மனிதப் பிறவிகளாக மதித்து அவர்களின் உள்ள உணர்வுகளை சமுதாயச்

சூழல் அதனைப் பக்குவப்படுத்தி வைத்திருப்பதையும் அவர்களே விரும்பினாலும் சில சமயங்களில் அந்த நியதியை மீறமுடியாத மனப்போக்கு விரும்பியோ விரும்பாமலோ படிந்து விட்டதையும் மனித உளவியலின் அடிப்படையில் தன் கதையில் நுண்மையாகக் காட்டுகின்றார். சிறிதுவெளிச்சம் என்ற கதையில் " பாணம் குடித்துத் தீர்ந்த பாத்திரம் போலத்தான் பெண்கள்" என்பதை அனுபவரீதியாக உணர்ந்த சாவித்திரியின் விரக்திநிலை அதே வீட்டில் வாடகைக்கு இருக்கும் மற்றொருவனை அவளிடம் அனுதாபம் கொள்ள வைக்கின்றது. அவளுடைய கணவன் கோபாலய்யர் தினமும் அவளைக் துன்புறுத்துவதைக் கண்டு கோபம் கொண்டவன்தான் அந்த எழுத்தாளன்..

ஓர் இரவில் அவனைத் தேடிச்செல்கிறாள் சாவித்திரி. "எதற்காக இந்த மனிதனிடம் இருக்கிறீர்கள்.....? பிறந்தகம் போகக் கூடாதா? என அவன் கேட்க .. இருக்க வேண்டிய காலம் என்று ஊர் ஏற்படுத்தி வைத்திருக்கின்றதே. அதற்கு மேல் பிறந்த வீட்டில் இடமேது..? பெற்றோர்களாவது...? புருசனாவது..? எல்லாம் சுத்த அபத்தம் ..... காக்கை குருவி போலத்தான் மனிதர்களும் இறகு முளைத்த குஞ்சைக் கூட்டில் நுழைய விடுறதா பட்சி... என்று சோகமாய் சமூக யதார்த்தத்தை தன் உணர்வோடு ஒன்றித்துக் கூறுகிறாள். மேலும் தற்கொலை செய்யப் பார்த்தேன் முடிய வில்லை....உயிர் இருக்கிறவரை அடிபட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான்...."

என் புருசன் என்னை அனுபவித்துக் குலைத்திருக்கின்றான். நான் சுகம் என்பதைக் காணவில்லை. "நான் உள்ளந் திறந்து பேசக் கூட ஒரு எல்லை இல்லையா?? இவ்வாறாக தன் உள்ளக் குமுறல்களை தன்னை மறந்து அவனிடம் கொட்டி விடுகிறாள். "நான் வாய் திறந்து சொல்ல முடியாது" இவ்வாறான கூற்று பெண்களின் அவலத்தை அவர்கள் மீது படிந்துள்ள சமூகப்பார்வையை அதையும் தாண்டி துணிச்சலுடன் எழுந்து நிற்கும் பெண்மையையும் எடுத்துக்காட்டுகிறார். இதே போல் "தனபாக்கியத்தின் தொழில்" எனும் சிறுகதையில் தேவதாசி – குலத்தொழில் நடத்தும் தாயின் கட்டுப்பாட்டை மீறி அவளது

மகள் எழுத்தாளன் ஒருவனுடன் நிரந்தரமாக வாழத் துணிந்த சம்பவத்தை ஒரு புரட்சி நிலையாகச் சித்தரிக்கின்றார். கிராமத்துப் பெண்ணின் போக்கினை அடிமைப்பயல், வீரம்மாளின் காளை போன்ற கதைகள் மூலமும் குழந்தைகள் கொலு, உயிரின் அழைப்பு, விதவைகள் துயரத்தினையும் வெளிக்காட்டுகின்றார். தன்னுடைய தங்கையின் மணவாழ்க்கைக்கு ஊக்கமளித்து ஆறுதலடையும் சரஸ்வதி என்னும் கைம்பெண்ணை கதையில் அறிமுகப்படுத்துகின்றார். மேலோட்டமான காதலினை அதாவது இன்றைய காதல்களில் பொழுதுபோக்குக் காதல் என்று கூடச் சொல்லலாம். காதலை நம்பாத ஒரு இளம்பெண்ணின் மன உணர்வினை அவளது வார்த்தைகளினுடாக புனர்ஜென்மத் தொகுதியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“உண்மையான அன்பு அப்படி ஒன்று இருக்குமா? நான் பச்சை யாக கேட்கின்றேன் இனிமேல் என்ன? நீங்கள் என்னுடைய அழகை அனுபவிக்க விரும்புகிறீர்கள் ....... ( புனர்ஜென்மத் தொகுதி) இதே தொகுப்பில் தன்மேல் வீணாகச் சந்தேகப்படும் கணவனின் தவறினைச் சுட்டிக் காட்டி உண்மையினை உணர்த்தும் மனைவியி னையும் தன் கதையில் சித்தரிக்கின்றார். “எப்படியா? இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமா? சொல்கிறேன் நீங்கள் என்மேல் எதற்காக சந்தேகம் கொண்டீர்கள்? என் நடத்தை கெடாதபடி என்னை முற்றும் உங்களுடையவளாக ஆக்கிக் கொண்டதாக உங்களுக்கு உங்களிடத்திலேயே நம்பிக்கை இல்லை.. ( புனர்ஜென்மத் தொகுதி)

ஆற்றாமை என்ற சிறுகதையில் பெண்ணின் மனதில் ஏற்படும் பொறாமை, பாரபட்சம், போன்ற உணர்வினை அது வெளிப்படுத்துகின்றது. இரு மணமான பெண்கள்; ஒருத்திக்கு கணவ னோடு சேர்ந்துவாழ முடியாத நிலை. இன்னொருத்தி கண்ணெதிரி லேயே எந்நேரமும் கணவனோட நுகரும் புலன் அனுபவத்தை நினைவு படுத்துபவள். கணவனைக் கண்டு குதித்தோடும் கமலாவை எண்ணி சாவித்திரி இப்படிப் பொருமுகிறாள். “.....உடனொத்தவள் நான் தனியாகக் கிடந்து சாவதைப் பார்த்து நாம் இவ்வளவு சந்தோசமாக இருக்கிறோம்”, என்று அவளுக்குப் பெருமை. “ ..

நான் நொந்து கிடக்கின்றேன்... நொந்து போயிருப்பேன்... என்று கொஞ்சமாவது அவளுக்குத் தோன்றினால் ..... எப்படித் தோன்றும்? பட்டால் அல்லா தெரியும்..." என்ற வார்த்தைகள் ஒரு பெண்ணின் கணவன் பிரிவால் ஏற்பட்ட ஆற்றாமையின் வேதனையினை வெளிப்படுத்துகின்றது.

"மூன்று உள்ளங்கள்" என்னும் சிறுகதையில் தனது உரிமைகளை விட்டுக் கொடுக்க இணங்காத பெண்ணின் மனத்தையும் ஒரு பெண்ணின் எல்லை கடந்த பாசத்தையும் காண முடிகின்றது. கருச்சிதைவு ஏற்பட்டதால் உடல்நலம் இழந்த தங்கை சுந்தாவுக்கு உதவி செய்வதற்காக மீனாட்சி வந்திருக்கின்றாள். தங்கையின் கணவன் சுந்தரம். சுந்தரத்திற்கு மீனாட்சியும் முறைப் பெண்தான். முதலில் அவளைத்தான் அவனுக்கு மணம் செய்விப்பதாக இருந்தது. நடைமுறையில் அவள் வேறு ஒருவனைத் திருமணம் செய்ய நேரிட்டது. ஆயினும் தங்கைக்கு உதவும் வகையில் சுந்தரத்தின் மீது தனக்குள்ள அன்பினைப் பணிவிடையாக்குகின்றாள். தன் கணவன் தன்அக்கா மீது பரிவு காட்டுகின்றான்... என உணர்ந்த சுந்தா சினம் கொள்கின்றாள். இங்கு இரு மனநிலையில் இருவேறுபட்ட பெண்களின் உணர்வுகள் சித்தரிக்கப்படுகின்றன.

"சுந்தா.. .... மீனாட்சி என்று அதே உணர்ச்சிப் பெருக்கில் ஏதோ ஆரம்பித்தான்.... தடுமாறின குரலில் .... இங்கே பாருங்கள் கிடக்கின்றது .. என்றாள் சுந்தா... இதில் வரும் வார்த்தைப் பிரயோகங்கள் அவளது கோப உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றது.

"வயது வந்துவிட்டது" என்னும் சிறுகதையில் சிறு வயதில் தன்னுடன் தொட்டு விளையாடிய மணியை இருவருமே வேறு வேறு திசையில் இல்லறத்தில் இணைந்த பின் காணும் வள்ளி சமூகப் போக்கிற்கேற்ப எட்ட நின்று பேசுவதைக் காண்பிக்கின்றாள். "முன்போல நாம் விளையாடுவதற்கு இடைஞ்சலாக... என்று ஆரம்பித்தேன். வயது வந்திருச்சில்லியா...! என்று சொல்லிய அவள்...." இக்கதையில் வள்ளி சிறு பெண்ணாக இருக்கும் போது அவனுடன் கூடி விளையாடினாலும் கூட பருவத்திற்கு

ஏற்ப பக்குவத்துடன் விலகிச் செல்லும் ஒரு கிராமத்துப் பெண்ணின் மனஉணர்வைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இவ்வாறாக சமூகத்தின் பல்வேறு மட்டத்திலும் வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் நிற்கும் பெண்களின் மன உணர்வுகளை அதாவது கோபத்தை , அன்பை, பொறாமையை, விரக்தியை, தங்கள் கூற்றுக்களாகவும் ஒரு வரியில், ஒருபெரிய மூச்சில், விடைகூற முடியாத மௌனங்கள் மூலம் உயிரோட்டமாக இலக்கிய உலகிற்கு கொண்டுவந்தவர் கு.ப.ரா தான் என்பதில் சந்தேக மில்லை...

**உசாத்துணை:**

ஆற்றாமைத் தொகுப்பு, 1990. ஞானச்சேரி சென்னை.

**சி.பேரின்பராணி**

## எந்தன் நிலை

வானத்தில் இருந்து குதித்து
வந்தேனா - இல்லை
பூமிக்குள் இருந்து வெடித்து
வந்தேனா!
அப்பன் இன்றி அநாதையாய்
வந்த நான்
ஆண்டவனைத் தந்தை
என்று கொண்ட நான்
சுற்றுகின்ற பூமியிலே
நாதியற்ற பிள்ளையென்று
தத்தளித்துக் கொண்ட நான்!
மண்ணோட மகளா!
இல்லை!
விண்ணோட விதியா!
தெரியவில்லை எனக்கு!
புரியவில்லை உங்களுக்கு!

# ஒரு நிமிடம் சிந்தி...

வழமைபோல் நந்தா வேலைக்குச் செல்கிறாள். அவள் கொண்டு போன வேக்கையும், சாப்பாட்டையும் மேசையிலே தூக்கிப் போட்டுவிட்டு சைன் பண்ணச் சென்றாள். "நந்தா, இப்போது நேரம் என்ன? 8.30க்கு எல்லாம் எல்லாரும் சைன் பண்ண வேண்டும். நீங்க; 8.35 இனி மன்னிப்பு எல்லாம் கிடையாது. 1/2 நாள் என்றுதான் கணிப்பிடுவோம். இனி நேரத்திற்கு வரவேண்டும்".

அது ஒரு தனியார் நிறுவனம். நந்தாவால் எதுவுமே பேச முடியவில்லை. அவளுடைய நாற்காலியில் வந்து உட்கார்ந்தாள். அவளுடைய மனசு, உடல் எல்லாமே களைத்து இருந்தது. அன்று காலையில் அவளுக்கு ஏற்பட்ட பிரச்சினையை அவள் சிந்திக் கிறாள்."

அதிகாலை 5.00 மணிக்கு எழும்புகிறாள். பல் விளக்கி, முகத்தைக் கழுவிவிட்டு முற்றத்தை விளக்கு வைத்துக் கூட்டுகிறாள். வீதியெல்லாம் நாய் பாய்ந்து பாய்ந்து குரைக்கிறது. மனசுக்குள் ஏதோ ஒரு பயம்; என்ன? நாய் இப்படிக் குரைக்கிறது. எதும் பிரச்சினையாக இருக்குமோ என சத்தம் போடாமல் காது கொடுத்தாள். இராணுவம் அவளின் வேலி ஒரமெல்லாம் கறுப்பு முண்டம் போல தெரிந்தது. அவள் கூட்டவில்லை. வீட்டிற்குள் வந்து கணவனை எழுப்புகிறாள். இஞ்ச பாருங்க நம்மட வேலி ஓரமெல்லாம் இராணுவம் நிக்கிது எனக்குப் பயமா இருக்கு கொஞ்சம் எழும்புங்க கிணற்றடிக்குப் போகனும் தண்ணீர் எடுக்க என்றாள். உடனே கணவன் போடி எனக்கு நித்திரை வருகுது. நீ ஏதும் அவனுகளிட்ட சொன்ன நீயாக்கும், கண்ணமூக்கக் காட்டி யிருப்பாய் அதுதான் அவனுகள் சாமத்தில வந்து நிற்காணுகள். உண்ட வேலையைப்பார் இல்ல என்றா உன்னுடைய பிள்ளை யயை எழுப்பிக் கூட்டித்துப்போ என்றான். மகனுக்கு 5 வயது, மகளுக்கு 2 வயது. பாவம் அதுகள் சரியான நித்திரை. அவள் வெளியில் போகவில்லை. அப்போது இன்னும் இருட்டி மழை

பெய்தது. அவள் சமையல் வேலையைக் கவனித்தாள். விறகு மில்லை. ஊதி, ஊதிச் சமைக்கிறாள். பிள்ளைகளை எழுப்பி இஞ்சிபோட்டு தேத்தண்ணியக் கொடுத்துவிட்டு அப்பாவை எழுப்புங்க என்றபோது மகள் 'அம்மா, அப்பா ராசம்மா அக்காட வீட்ட போகிறார்' என்று கூறியவுடன், அவள் உடனே சீ; என்ன மனுசன் வெறும் வயித்திலபோய் தேத்தண்ணியக் குடிக்காம கசிப்பக் குடிக்கப் போறானுகள் இவனெல்லாம் கடைசிமட்டும் திருந்த மாட்டானுகள் என மனசுக்குள் திட்டித் தீர்க்கின்றாள். மகனை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு மகளை தனது தாயின் வீட்டில் கொண்டுபோய் விடுகின்றாள். நெத்தலி கருவாடு மட்டும்தான் இருக்கு அதோட இன்னுமொரு கறி, சொதி வைக்காவிட்டால் பிள்ளைகள் சாப்பிடாது. வாசலில் நின்ற முருங்கை மரத்தைப் பார்க்கின்றாள். அதில் இலை கொட்டி அப்போது துளிர்விட்டிருந்தது. முருங்கை இலையை பறித்து சொதி வைத்துவிட்டு நேரத்தைப் பார்க்கின்றாள். 7.30 மணியாயிற்று. உடனே அவள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது கணவன் வந்து இன்றைக்கு மத்தியானம் என்ன கறி சமைச்சி வைச்சிருக்கா அவள் கறியைச்சொல்லி முடிக்கும் முன்பே இதெல்லாம் ஒரு கறியா, அதைவிட பட்டிணியாக் கிடக்கலாம். என்னடி அவசரப்பட்டு சாப்பாடு கட்டுகிறா எங்க போகப்போகிறா என்று அவன் கேட்க, நந்தா உடனே உங்களுக்கு கத சொல்லித்து என்னால நிற்க ஏலாது என்று கூற உடனே அவன் அவளுடைய கன்னத்தில் அறைகிறான். என்னடி கதைக்கிறா, என்னைவிட உனக்கு வேலை முக்கியமா, என்னில பாசத்தைக் காட்டு, நில்லு நான் கடைக்குப்போய் முட்டை வாங்கித்து வாறன் நல்லாப் பொரிச்சி வைச்சிட்டுப் போ! நந்தா அவன் வரும்வரை குளிக்காமல் நிற்கிறாள். முட்டையைப் பொரித்து வைத்துவிட்டு அவசர அவசரமாக ஆயத்தமாகி றோட்டிற்கு வருகின்றாள். வஸ் எல்லாம் சரியான சனமாகத்தான் வருகுது நிப்பாட்டுறானுகளு மில்லை. அப்போது கணவன் சைக்கிளில் வருகிறான். என்ன இன்னும் ஏற இல்லையோ. எத்தனை வஸ் போகுது யாருடைய வஸ் வரமட்டும் நிற்கிறா? விட்டுத்து வீட்ட போ ஒவ்வொரு நாளும் நீ வேலைக்குப் போகத் தேவையில்லை. என்று கூறி விட்டு அவன் செல்ல ஆட்டோ ஒன்று ஒரு பொம்பிளய ஏற்றிக்கொண்டு வந்தது. அதை நிப்பாட்டி அதில் ஏறினாள். அந்த ஆட்டோக்காரன் 50/= கேட்டான் அப்போது

அவள் வீட்டில குடிச்சிப்போட்டு வேலைக் கும் போகாம சுத்தித் திரியிறவன் என்னை நேரத்திற்கு ஏத்திக் கொண்டு விட்டால் எவ்வளவு உதவியாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு நானும் இவ்வேலையை விட்டா என்ட பிள்ளைகளுடைய நிலை என்ன? எவ்வளவு வீட்டில் பிரச்சினை என்றாலும் நந்தா முகத்தை வாட்டமாக வைத்து இருக்க மாட்டாள். அவளின் முகத்தில் சிரிப்பு, கதை அவளின் வேலை போன்றவற்றை ஒழுங்காகச் செய்து முடிப்பாள். வீட்டில் நிம்மதி இல்லை. நம்மைப்போல் இப்படி பெண்கள் இருப்பார்களா? இருக்கிறார்களா? ஒவ்வொரு நாளும் எவ்வளவு வேதனைகளை அனுபவிக்கின்றேன். என்ன செய்வது தலைவிதியா என ஒருமுறை சிந்திக்கிறேன் தலைக்கணம் பிடித்த அவனுகளுக்கு குடியும் கும்மாளமும். இரவில் அவனுக்கு ஆசை ஏற்படும் போதெல்லாம் அவனுடன் போக வேண்டும். இல்லாவிட்டால் வேலைக்குப் போக விடமாட்டான் பகலில் என் சந்தோசத்திற்கு இடம் கொடு என்பான். அதனால் விருப்பமில்லா சந்தோசத்தை அனுபவிக்கிறேன். அவனுக்கு எதிர்த் துக் கதைத்தால் வேலைக்குப் போகாதே என்பான். வேலையிலும் தொடர்ச்சியாக லீவு எடுக்க முடியாது என்ன செய்வது இப்படியே நம்வாழ்வு போகட்டும் என்று விட்டுவிடுவதா இல்லை. இதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டும். என் வாழ்வு எப்படி இருக்கவேண்டும் என்பதை நான் பலமுறை சிந்தித்து ஒருமுடிவு நானே எடுக்க வேண்டும்.

***உயிரைத் தியாகம் செய்யாதே***
***உனக்குள் தீர்மானம் எடு***
***உன் உழைப்பு, உன்உடல், உன்உயிர் உன்***
***பிள்ளைகள் - அவை***
***உனது***
***உன்னைத் துன்பப்படுத்தும்***
***உனக்குப் பாரமாய் இருக்கும்***
***எக்கல்லையும் எடுத்துவிடு***
***உன் நாக்கு***
***கூரிய வாள்***

- A. இலங்கேஸ்வரி -

# அன்று

அந்திப் பொழுது அஸ்தமிக்கும் வேளையிலே
அந்த ரணமான ஓசை என் காதில் ஒலிக்க
சற்று சிந்தித்தபடி என் பாதங்கள் நகரத்தொடங்கும் முன்...
பேரிரைச்சல் காதினைத் துளைத்தது

என்ன இது என்று சிந்திக்கும்முன்
என்னையும் தாண்டின சனக்கூட்டம் ஓடின
அவர்களுடன் சேர்ந்து ஓட முற்படும் முன்...
விழுந்துவிட்டது வீட்டினுள் செல்

காயப்பட்ட கணவனை வைத்தியத்திற்கு கொண்டு
செல்லுமுன் - பிரிந்து விட்டது உயிர்
சடலத்தை புதைப்பதற்கு முன்...
சுடுகாடாய் மாறியது ஊர்

கதிரவன் எழுவதற்கு முன்.... புறப்பட்டேன்
அகதி என்னும் பொது உடமையில்
விதவை என்னும் தனிமையில்



A. இலங்கேஸ்வரி



# நவீன எயிட்சின் பிடியில் சிக்கித் தவிக்கும் பெண்கள்

எமது நாடானது ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் (development) நாடாகும். கீழைத்தேய வர்த்தக மையங்களுடனான, கேந்திர நிலமைகளுடன் சிறப்புற்று வந்த, எமது நாடு, இன்று வரை பல்வேறு கலாசார சூழ்நிலைகளுக்குள் அகப்பட்டிருக் கின்ற, நிலமை மிகவும் கவலைக்குரியதாகவேயுள்ளது. நாகரீக மோகம், காரணமாக உருவாகியிருக்கின்ற பாரிய பிரச்சினை, எய்ட்ஸ் எனும் நோயாகும். உலக ரீதியில் முக்கியத்துவம் வகித்து வரும் இந்நோய் எமது நாட்டிலும், இன்று முக்கிய இடத்தினை பெற்று வருகின்றது. எமது சமூக அமைப்பானது தனித்துவ மானது. உலக மக்களால் பாராட்டப்பெற்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்கின்ற, காலங்காலமான பண்பாட்டுப் பேணுகையானது இன்று பாரிய கேள்விக்குறிக்குள் தள்ளப்பட்டிருப்பது ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலமையாகும். எயிட்ஸ் என்கிற நோயானது இன்றுவரை ஆண் பெண் என்கின்ற வேறுபாடில் லாமல், குழந்தைகளுக்கும்கூட, தொற்றியிருப்பது கவலைக்குரி யதான விடயமாகும். இவற்றுள்ளும், காலத்திற்குக் காலம் அடிமை என்கின்ற முட்டாள் தனமான நம்பிக்கைகளைச் சாட்டாகக் கொண்டு, பெண்ணை எமது சமூகம் துன்புறுத்தி வருகின்றது. ஆண்களுடைய அதிகார வர்க்கத் தனமும், பணம் படைத்தவர்க ளுடைய அதி தீவிர செயற் பாடுகளும், பெண்ணை இக்கொடிய நோய்க்கு இட்டுச் செல்கின்ற துர்ப்பாக்கிய நிலமை அதிகரித்து வருகின்றது. ஆபிரிக்க நாடொன்றில் உருவான இந்நோயானது எமது நாட்டினை தன் கோர இரைகளுக்குள் ஆட்கொண்டு

வைத்திருக்கின்றது. பொதுவாக நோக்குகின்றபோது ஆண்களை விட, அதிகமாக, பெண்களே இவற்றுக்கு, நாளாந்தம் இரையாகி வருவதினை அவதானிக்க முடிவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.

எச்.ஐ.வி/ எய்ட்ஸ் என்கின்ற நோயானது, ஒருவகை வைரஸின் தாக்கமாக உள்ளது. இந்நோய்க்கிருமி, எமது உடலினுள் புகுந்து நோயெதிர்ப்பு சக்தியினைக் குறைக்கும் பொருட்டு, வெண்குருதி சிறுதட்டுக்கள் போன்ற முக்கிய கலங்களைத் தாக்கி, அழிக்கின்றது. இத்தகைய சூழலில் குறித்தநபர் எய்ட்ஸ் நோயாளியாகின்றார்.

மேற்படி, நோயானது பெண்களை அதிகம் தாக்குகின்ற மைக்கு முக்கிய செல்வாக்கான காரணிகளாவன.

### உல்லாசப் பயணிகளின் வருகை

பொதுவாக, எமது நாட்டின் இயற்கையழகினை இரசிப்ப தற்கும், தங்களது பொழுது போக்கினை சிறப்பாக மேற்கொள் வதற்கும், வருகைதருகின்ற, உல்லாசப்பயணிகளின் உடல் பசிகளுக்கு, யாதுமறியாத பெண்கள் பலியாவதுடன், நோயையும் பெற்றுக்கொள்கின்ற அபாய நிலமை காலம் காலமாக இடம்பெற்று வருகின்றது. இத்தகைய நிலமைகளால் எய்ட்ஸ் நோயாளிக ளுடைய எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. வெளிநாட்டி லிருந்து வருகின்றவர்களுக்கு, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள செலவீனங்கள், அவர்களுக்குச் சாதகமாக அமைகின்ற படியினால், அடிக்கடி, உல்லாசப்பயணம் என்கின்ற போர்வை யினால், அப்பாவி மக்கள் சீரழிகின்றார்கள்.

### வெளி நாட்டுத்திருமணம்

திருமணமானது, இன்று பலருக்கு எட்டாக் கனியாக வேயுள்ளது. இடைத்தரகர்களாகச் செயல்படுபவர்கள் தங்கள் சுயநலத்தினை அடிப்படையாகக் கொண்டு, பல சட்டவிரோத மான வெளிநாட்டுத் திருமணங்களை மேற்கொள்வதற்கு வழி சமைத்துக் கொடுக்கின்றார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளையின், அந்தரங்கங்களை அறியாது, அங்கு செல்லும் பெண்ணானவள், மேற்படி நோய்களுக்குள் ஆளாகிக் கொள்ளும் அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

### வறுமை

எமது சமூகம், மிகவும் வறுமைப்பட்டது. அன்றாட சீவியத்தைக் கொண்டு நடத்த வேண்டிய கடைப்பாட்டில் வாழ்ந்து வருகின்றது. இவற்றைவிட, காலத்துக்கு காலம் அதிகரித்துவரும் பொருளாதார விலையேற்றங்கள், வறுமைப்பட்ட சமூகத்திற்கு பேரிடியாகவே அமைகின்றன. இந்த நிலமையில், குடும்பப் பொறுப்பை தலையில் சுமந்திருக்கும் பெண்கள், வறுமையின் சூழ் நிலையினால் உடலை விற்கின்ற நிலமையும் ஏற்பட்டு விடுகின் றது. இதன் காரணமாக பாலியல் பற்றிய கொடிய நோய்கள் இப்பெண்களை பீடித்துக் கொள்கின்றன.

### ஆபாசத் திரைப்படங்களும், குறுந்திரை, நாடகங்களும்

இன்று வீட்டிற்கு வீடு திரைவிருந்து அரங்கேறிக் கொண்டி ருக்கின்றது. திரைப்படங்களில் நடிப்பவர்கள், ஆபாசமாகத் தங்க ளைக் காட்டுவதால் பெரியவர்கள், சிறியவர்கள் என்ற பேதமின்றி, அனைவருமே பாதிக்கப்படுகின்றனர். இதுமட்டுமின்றி, நாடகத் தொடர்கள் (காவியாஞ்சலி, மெட்டியொலி, சித்தி, சலனம்...) போன்றவைகள் ஒருவனுக்கு ஒருத்தி என்கின்ற பண்பாடுகளை

மீறிச் செயற்படுகையில், படத்தினைப் பார்க்கின்றவர் தனக்குள்ளே "தானும்ஒன்றுக்கு மேற்பட்ட பலரை வைத்திருக்க முடியும்" என்கின்ற முடிவுக்கு வருகின்றார். ஆண்களின் இத்த கைய முடிவுகளும் பெரும்பாலும் பெண்களையே பாதிக்கின்றன.

இம்முறைகள் சமூகச் சீரழிவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதோடு, எய்ட்ஸ் போன்ற,கொடிய நோய்களும் தொற்று கின்ற நிலமைகளை ஏற்படுத்தி விடுகின்றன.

எனவே, மேற்படி பல காரணிகள் Hiv/Aids என்கின்ற கொடிய நோயை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும், இவைபற்றிய விழிப்புணர்வுகளை ஒவ்வொருவரும் பெற்றிருப்பது கட்டாயமானதாகின்றது. நோய் வருமுன் காப்பது எளிமையாகின்ற விடயமெனினும், நோயானது வந்ததன் பின்னர் எம்மைக் காப்பாற்றிக் கொள்ளுவோம் என நினைப்பது முற்றிலும் முட்டாள் தனமானதாகும்.

முக்கியமாக, ஆபத்தின் விளிம்பில் துன்பப்படுகின்ற, பெண்களே தங்களை விழிப்புணர்வுடன் காத்துக் கொள்ளல் வேண்டும். அதேநேரம், நல்ல குடும்பப் பொறுப்புள்ள ஆடவர்கள் இவைபற்றி அறிந்து எதிர்காலத்தில் இவற்றைத் தடுப்பதற்கு பெண்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். பெண்ணானவள் போல் ஆணும், அவளை நன்கு புரிந்து வாழுவானானால், எமது சமூகத்திலிருந்து இந்நோயினை விரட்ட முடியும்.

– சசிகுமார் வரதராசா –

# நறுக்கப்படுகின்ற மீசைகள்

ஜெ. பாலறஞ்ஜனி
ஹட்டன்

வாலிபத்தின்
முதல் மீசை...
இளைய மீசை....
வாலிபத்தின் புதுத்துள்ளலில்
புதிய ஆடியின் முன்
இளங்கன்றாய்....
முறுக்கிக் கொள்கின்றேன்
துடிப்பேறிய இளமை
மீசை துடிக்கிறது....

"எங்கிருந்தோ....
காற்றலையில்
கலந்து வருகிறது
முகாரியின்...
கொடிய ராகம்."

நீ பெண் என்றது
ஆரம்பம்...
முதல் அடி...
முதல் வலி....
முதல் கண்ணீர்...
முதல் மரணம்...
இறுதி காணத் துடித்து
தோற்றேன்...

இன்று...
என் விம்பம் விழுந்தே
ரசமிழக்கப்பட்ட
பழைய ஆடியின் முன்
மீசை நறுக்கப்பட்டவளாய்
இவள்.



# எழுதப்படாத விலாசங்கள்



நிசப்த இரவின்
மௌனம் கிழிக்கும்,
பசித்த குழந்தைகளின்
வீரிட்ட அழுகைகள்...
ஓநாய்க் கூட்டமும்...
தெருநாய்க் கூட்டமும்...
போட்டியிட்டு ஊளையிடும்,
வெண்ணிலவில் கூட
அகோரம் தெரியும்,
மரணங்கள் மலிந்த
சுடுகாட்டு தேசமது.

அங்கே அவள்....
இடுப்பின் சுமைகள்
இறங்காத போதும்
வயிற்றிலும் சுமைகள்
கனத்தன...
பசித்த குழந்தைகளின்
ஏக்கப் பார்வைகள்...

வீரிட்ட அழுகைகள்...
பழகிப் போயின...
பழையனவாய்...
இதயம் கல்லாய்....
கண்ணீர் கசிந்தது.

குப்பை மேடு
அவர்களின் போர்க்களம்
பாகம் கேட்டு
சண்டையிடும்
நாய்கள் கூட்டமும்...
வட்டமிட்டு உணவைப் பறிக்கும்
காக்காய்க் கூட்டமும்...
உண்டு அங்கே – என்றாலும்
குப்பை மேடு... அவர்களின்
அட்சய பாத்திரம்.

குப்பையை கிளறி
வெளிக்கிளம்பும் – சேவல்
விடியலைச் சொல்லி
போலியாய்க் கூவிடும்.

ஜெ. பாலறஞ்ஜனி
ஹட்டன்

# தமிழர் பாரம்பரியத்தில் பெண்கள் கல்வி பற்றிய சிந்தனை -

## *சங்க இலக்கியங்களினூடாக ஓர் கண்ணோட்டம்*

தமிழர் பாரம்பரியத்தில் கல்வி கற்பதற்கான சம சந்தர்ப்பம் முழுமையாகப் பெண்களுக்கு வாய்க்காத போதும் ஏதோ ஒரு வகையில் கற்றுயர்ந்துள்ளனர். சங்க இலக்கியங்கள் மூலம் எமது ஆரம்பகால இலக்கிய, வாழ்வியல் கோலங்களை ஓரளவு அறியக்கூடியதாகவுள்ளது. பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களினூடாக நோக்கும் போது பெண் வீட்டிற் குரியவளாகவும், ஆணுக்கு பணிவிடை செய்பவளாகவுமே காட்டப்படுகிறாள். கல்வி, தொழில், போர் ஒழுக்கம் போன்றன ஆணுக்குரியவையாக இருந்துள்ளன.

"வினையே ஆடவர்க்குயிரே மனையுறை
மகளிர்க்கு ஆடவர் உயிரென...

(குறுந்தொகை 135:1-2)

இற்பினிள் வழாஅ நற்பல உதவி
பெற்றோற்பெட்கும் பிணையை அகென...

(அகம் 8,6:13-14)

போன்ற சங்கச் செய்யுள்களில் இருந்து பெண்கள், கணவன் விரும்பத் தக்கவளாகவும் சிறந்த கற்பொழுக்கம் கொண்டவளாகவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் பெற்றுக் கொடுப்பது தாயின் கடமை என்றும் குழந்தைகளை சான்றோராக்குதல் தந்தையின் கடமை என்றும் கூறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் பெண்கள் வீட்டிற்குரியவளாகக் கூறப்பட்டாலும் அரசரவையில் பல பெண் புலவர்கள் அக்

காலத்தில் வாழ்ந்துள்ளனர். சுமார் 29 பெண்பாற் புலவர்கள் இங்கு இருந்ததாக அறிய முடிகிறது. ஔவையார், பாரிமகளிர், காவற்பெண்டு, காக்கைபாடினியார் போன்றவர் களை சான்றாகக் கூறலாம்.

ஆரம்ப காலங்களில் இலக்கியப்படைப்பில் பெண்க ளின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்தபோதும் தொகுத்தோன் தொகுப்பித்தோனது அலட்சியப் போக்கினால் அவர்களது படைப்புக்களும் பெயர்களும் கூட இடம்பெறாமல் போயிருக்கக் கூடும். ஏனெனில் சங்க இலக்கியங்கள் அனைத்தும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என எந்த அடிப்ப டையில் தொகுக்கப்பட்டன என்பதில் இன்னமும் தெளிவு இல்லை. அகம், புறம் என்ற பிரிப்பு கூட சில இடங்களில் பொருந்தி வராமையினை அவதானிக்கலாம்.

வரம்பற்ற புணர்ச்சியும், நாடோடி வாழ்வுடனும் இருந்த மக்கள் காலப்போக்கில் நிலையான ஒரு இடத்தில் தம் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய விளைகிறனர். இங்கு ஏற்படக்கூடிய சொத்துப் பிணக்கினை நீக்க குடும்பம் என்ற அடித்தளம் இடப்படுகிறது. இங்கு கற்புக் கோட்பாட்டினை அவதானிக்க முடிகிறது. இதில் இருந்தே பெண் இல்லத்திற் குரியவளாக்கப்படுகிறாள். இதனை சங்ககால குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் ஆகிய நிலப் பிரவுகளினுள் இருக்கும் படிமுறைவளர்ச்சி மூலம் காணலாம்.

கல்வி என்பது இங்கு வெறுமனே ஏட்டுக் கல்வி யாகவன்றி தொழில் முறைகள் கற்கையினையும் இங்கு அவதானிக்கலாம். உதாரணமாக குறிஞ்சி நிலத்தில் பெண் கள் திணைப்புலம் காத்தல், முல்லை நிலத்தில் பால், தயிர் போன்றவற்றை விற்றுள்ளனார்.

“ஆய்மகள் அளைவிளை உணவிற்கிளைவுடன்
அருந்தி நெய் விலைக்கட்டிப் பசும் பொன் கொள்ளாள்
எருமை நல்லாள் கரு நாகு பெறு உம்
மடிவாய் கோவலர் குடி...

(பெரும்பாண் 162-160)

எனும் பாடல் மூலம் முல்லை நில ஆயர் மகளிர் தயிர், நெய், மோர் முதலியவற்றை குறிஞ்சி போன்ற நிலங்களுக்குக் கொண்டு சென்று பண்டமாற்றாக நெல்லைப் பெற்றுள்ளனர். அதன் மூலம் வந்த வருமானத்தை கொண்டு தமக்கு வேண்டிய அணிகலன்கள் வாங்காது பசு, எருமை முதலியவற்றை வாங்கி தம் குடியை ஒப்பிய சிறப்பை உணர முடிகிறது.

இவ்வாறாக ஏனைய நிலப்பகுதிகளிலும் ஆண்களுக்கு துணையாக அவர்களின்தொழில் முறையில் பெண்களும் பங்கெடுத்துள்ளனர்.

பெண் வீட்டுக்குரியவளாக பேசப்பட்டாலும் அனைத்தையும் கடந்து எமது பாரம்பரியத்தில் பெண்கள் தற்துணிவுடன் வாழ்ந்துள்ளார்கள். வாழ்க்கைக்கான.... வாழ்வதலுக்கான அனுபவங்களும் அணுகு முறைகளும் கூட இன்று கல்வி முறையாக ஏற்க வேண்டியதாகவுள்ளது.

சுதாகினி S

# கேள்விகள்???

என் கண்களில் சீரான
ஒரு தேடல், அறிவின்
சிகரத்தை தொட்டுவிட
ஊர் எல்லை தாண்டி
பயணிக்கிறேன்
என்னுள்ளே ஒரு பூரிப்பு,
சந்தோஷம்
கலாசார சீருடை
என்னுடன் ஒட்டிக்கொண்டாலும்
என்னாலும் ஒற்றையாய்
பயணிக்க முடியும்
என்பது பற்றி.

காலம் ஊர்ந்து செல்ல
மனத்திரை மறைத்து,
பல இளைஞர் கூட்டம்
என் பின்னால் அலைகிறது
இவர்கள் ஊருக்கு
சேதி சொல்லும் ரிப்போட்டர்கள்
என்பதை உறுதியாய்
உணர முடிந்தது.

மீண்டும் பயணிக்கிறேன்
வீடு தாண்டு முன்
வீதியிலே குசுகுசுப்புகள்,
பரபரப்புகள், குரூரப் பார்வைகள்
வெறிநாய் போல
தோற்றமளிக்கின்றன.

நான் அமைதியாய்
நடக்கிறேன் விடைகாணா
கேள்வி அலைகள்
என் மனக்கரையில்
மோதிச் செல்கின்றன.
இதற்கு தீர்வு வேண்டும்
என் மனம் ஆதங்கப்படுகிறது.
எப்படி என்பதுதான்
தெரியவில்லை.
மூளைக்கு உயிரூட்டுகிறேன்.
சேமிப்பகங்களிலும்
யதார்த்த பூர்வ பதிலில்லை!

ஓ! விடை கிடைக்கிறது
மதங்களையும், வரலாறுகளையும் தாண்டி
கடவுளும் வரம்பெற்று
பெண்ணாய் இப்பாரினில் வாழும்போது...

சஜிதா ஏறாவூர்

என்றும் அன்பின் ஆசிரியருக்கு

நீண்ட ஓர் இடைவெளிக்குப் பின் மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. கால ஓட்டத்தின் தேவைகளுடன் போராட ஓடத் தொடங்கிய எமைப்போன்ற பெண்களுக்கு இளைப்பாறும் நிழல் மரமாய், தாகம் தீர்க்கும் நல்லருவியாய் “பெண்” சஞ்சிகை என் றென்றுமே இருந்து வருகின்றது. தூங்க முனையும் போதெல்லாம் எம் தூக்கத்தையும் நீண்ட மௌனத்தையும் களைந்து எம்மை எழுதுகோல் ஏந்திய பிரம்மாக்களாக்கும் உங்களை மறக்கவே முடியாது. என்றும் மறந்ததும் இல்லை.

என்றும் என் ஆக்கங்கள் இனி பெண்ணை அழகுபடுத்தப் பிறந்து கொண்டே... இருக்கும்.

நன்றிகளுடன்

என்றும் அன்புடன்
இவள்
ஜெய பாலறஞ்ஜனி

அன்பின் சகோதரி,

பெண் சஞ்சிகைக்கு நன்றி. தொலைக்காட்சி நாடகங்களால் பாதிப்படையும் நமது தமிழ்ச் சமூகப் பெண்களைப் பற்றிய கட்டுரைகள் மிகவும் ஆணித்தரமானவை. நன்றாக விளாசி உள்ளார்கள் எமது சகோதரிகள். ஒன்றைக் கூற மறந்து விட்டார்கள். அந்நாடகங்களில் வரும் கேள்வி - பதிலும் அதற்கான தங்கக் காலை எனும் பரிசும் தங்கத்திற்காக எடைபோடு மளவிற்குத் தமிழ்ப் பெண்களின் கற்பு, சுயமரியாதை மலிந்த பொருளாகி விட்டதே சகோதரி! நெஞ்சம் பதறுகிறது யாரிடம் போய் முறையிட!

மேலும் சில புதிய தலைப்புக்களை நீங்கள் தொட்டுக் காட்டினால் வேலைப் பளுவோடு இருக்கும் எம்மைப் போன்ற பெண்களுக்கு சிந்தனையைத் தந்து எழுதத் தூண்டுமல்லவா? சில தலைப்புக்களை எதிர்பார்க்கிறேன்.

நன்றி
அன்புடன்
தி. ஜயந்தி

## எண்ணப் பரிமாற்றல்

"சிரிக்கவல்ல சிந்திக்க" எனும் தலைப்பில் பெண் இதழில் வெளிவந்திருந்த மங்களா சங்கரின் கட்டுரை பற்றிய எனது கருத்துக்களை இங்கு முன் வைக்கிறேன்.


இன்டர்நெட் வசதிகளைக் கொண்டிருக்கும் அனைத்துக் காரியாலயங்களிலும் வெப்தளத்தில் பொறுக்கிடும் துணுக்குகளை ஊழியர்கள் தமக்கிடையே பரிமாறிக்கொள்வது சகஜமாகிவிட்டது. வேலைப் பளுவை மறந்து சிந்தனையை வேறுபக்கம் திருப்பி புத்துணர்வை ஏற்படுத்துதல் எனும் நோக்குடன் இவை பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய பல துணுக்குகளைப் பார்த்த போது இவற்றுள் பொதிந்துள்ள ஆணாதிக்க கருத்தியலைப் புரிந்துகொள்ள முடிந்தது.

நவீன சமுதாயத்தில் மிக விரைவாகவும் மிகப் பரவலாகவும் ஆணாதிக்கக் கருத்தியலை மீள் உற்பத்தி செய்பவனவாக இந்த மின்துணுக்குகள் உள்ளன.

இந்த துணுக்குகளுள் மறைந்துள்ள அரசியலை பெண்ணிலைவாதக் கண்ணோட்டத்தில் மிகச் சிறப்பாக மங்களா எடுத்துரைத்திருக்கிறார் பாராட்டுக்கள்.

**ஸ்டெலா விக்டர்**


ISSN - 1391 - 6122


எழுவதும்
மீண்டும் எழுவதும்
விழுந்ததை மறப்பதும்
வாழ்க்கையை தொடர்வதும்
இயற்கையை ஏற்பதும்
மனித
வாழ்க்கை நியதியாகும்
-விஜலட்சுமி சேகர்-